உ

சிவமயம்



அமரர்

# இளையதம்பி கிருஷ்ணராஜா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "கிருஷ்ண விஜயம்"

20.04.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், மூளாயைப் பிறப்பிடமாகவும், இல: 3/1,
திருவையாறு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# இளையதம்பி கிருஷ்ணராஜா

அவர்களின் சிவபதப்பேறு
குறித்த 31ஆம் நாள் நினைவு மலர்

## "கிருஷ்ண விஜயம்"

**20.04.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பிறவிப் பெருங்கடல் தனில்
பேர் பெறு இவ் வாழ்வில்
கூறிய இல்வாழ்வில் எம் தாயின் மணாளனாகி
பேறுடன் எம்குலம் விளங்க எமை ஈன்றவரே!
வீறுநடை போட்டு வையகத்தில் நாம் வாழ
வேதனை தாங்கி நின்றே
கூரிய மொழிதனில் புத்தி சொல்லி
குவலயத்தில் எமைக்காத்தவரே!
தேறியே நாம் தூரவழி நின்றகாலை
சேர் நல்வினைப் பயணந்தனில்
இறைவனடி சேர்ந்ததனால்
கார்மேக இருளது போல்
கவலையில் வாடியிருந்தாலும்
சீராளனே! தேவே! எம் பிதாவே !
பேர்வைத்த பரமனடி தொழுதே இம்மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்
நின் பாதக்கமலங்களுக்கு.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

இங்ஙனம்
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனம் மகிழ
28
08
1939

மனம் நெகிழ
21
03
2022



# அமரர்
# இளையதம்பி கிருஷ்ணராஜா

அவர்களின்

## "திதி நிர்ணய வெண்பா"

ஆண்டு பிலவ அபரபட்ச திருதியையாம்
பூண்ட பங்குனித்திங்கள் ஏழு சுவாதியில் – நீண்ட
புகழுடைய திருவாளர் இளையதம்பி கிருஷ்ணராஜா
அகமகிழ் சிவப்பேறடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

உண்ணாமுலை யுமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவனேனைக் கருணையினால்
கலந்து ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக்கொள்ளே

## திருவிசைப்பா

இடர் கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருட்பிழம்பு அறஎறிந்து எழுந்த
சுடர் மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதீ !
அடல்விடைப் பாகா ! அம்பலக் கூத்தா ! அயனொடு
மாலறி யாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்(கு)
இவ் அண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

வரதா மணிநீ யெனவோரில்
வருகா தெதுதா னதில்வாரா
திரதா திகளால் நவலோக
மிடவே கரியா மிதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூ லறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனா புரிவாழ் பெருமாளே

## வாழ்த்து

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற்கு அரிய செவ்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க! சேவலும் மயிலும் வாழ்க!
வெய்ய சூர் மார்பு கீண்ட வேல் படை வாழ்க! அன்னான்
பொய்யில் சீர் அடியார் வாழ்க! வாழ்க இப்புவனம் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# இளையதம்பி கிருஸ்ணராஜா



## அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

இயற்கை எழில்மிகு, நாற்புறமும் இறைவன் ஆலயங்களும் நிறைந்த இலங்கையின் குபேர பூமியான வடக்குத் திசை அமைந்த யாழ்ப்பாணத்தின் மூளாய்க்கிராமத்தில் தந்தை இளையதம்பி அவர்கட்கும், தாய் சிவனேஸ்வரி அவர்கட்கும் 1939.08.28 இரண்டாவது மகனாகப் பிறந்தார். அவருடன் சகோதரர் சகோதரர்களாக காலம் சென்ற கையிலாயநாதன் மூத்த சகோதரனாகவும் இளைய சகோதரர்களாக காலம் சென்ற சோமஸ்கந்தா மற்றும் தியாகராஜா ஆகியோரும் பிறந்தார்கள்.

சட்டத்தரணியான தந்தையாரின் வழிநடத்தலிலும் செல்வச் செழிமையுடனும் கண்ணியமிகுந்தவராக வட்டுக்கோட்டை விக்ரோறியா கல்லூரி ஆங்கில மொழியில் கல்வி பயின்றார். பாடசாலை விளையாட்டு போட்டிகளில் வினைத்திறன் கொண்ட மாணவனாகத் திகழ்ந்ததுடன் தனது சாத்வீகப் பண்புகளால் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தார். கிரிக்கட் விளையாட்டில் அபரீதமான ஆர்வமுடையவர். இதனை செயலிலும் நிரூபித்தார்.

### இல்லற வேள்வியில்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ராசையா நாகம்மா தம்பதியினரின் அன்பும் பண்பும் நிறைந்த மகளான இதயராணி அவர்களை 1971.02.11 அன்று திருமணம் முடித்தார்.

அறம் செய்வதே திருமணத்தின் நோக்கம் என்ற உயர்ந்த அறிவியலின்படி தனது இல்லம் தேடி வருபவர்களுக்கு தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தாளுடன் சென்று உணவளித்து உதவியளித்து இல்லத்தின் புனிதத்தை நிரூபித்தார். இவர்களது இல்லற வேள்வியின் பயனாக நற்பண்புகளும் நல்லறிவும் நிறைந்த புத்திரி புத்திரர்களாக மேகலா, ராஜ்குமார் மற்றும் ரவிக்குமார் ஆகியோரை வாரிசுகளாக பெற்றுக் கொண்டனர்.

கல்வியிலும், விளையாட்டிலும் எல்லாவற்றிலும் மேலாக நற்பண்புகளின் மகுடமாகப் பிள்ளைகள் திகழ்ந்தார்கள். தனது பிள்ளைகளுக்கு உரிய வயது எய்தியதும் அவர்களுக்கு சிறந்த வாழ்க்கைத் துணைகளைத் தேடி அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். மூத்த மகள் மேகலாவிற்கு சபேசனையும், மகன் ராஜ்குமாரிற்கு தபோதினியையும் ரவிக்குமாரிற்கு ஆஷாவையும் திருமணம் செய்து வைத்தார்.

திருமணத்தின் பயனாக சௌமியன், ஷரினி, சஜீனா, அபிசேக், நேஷ்னா, கரிஸ்மன் ஆகிய பேரப்பிள்ளைகளை அடைந்து அவர்களை அரவணைத்து மகிழ்ந்தார். தற்போது மேகலா அவர்கள் லண்டனிலும் ராஜ்குமார் மற்றும் ரவிக்குமார் ஆகியோர் கனடாவிலும் வசிக்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடும் பயணம்

கிருஷ்ணராஜா அவர்கள் மூளாயில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் வழக்கறிஞரான தந்தை கிளிநொச்சியில் உள்ள விவசாயக் காணிகள் பராமரிக்கும் முகமாக அவரை 1956 காலப்பகுதியில் கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்தார். அங்கு சென்ற ஐயா அவர்கள் கிளிநொச்சிப் பிரதேசத்தின் பல விவசாயப் போராட்டங்களில் பங்கு பற்றினார். இக்காலப்பகுதியில் இளைஞர்களால் போற்றி மதிக்கப்பட்ட தலைவரானார்.

1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் G.G பொன்னம்பலம் அவர்களின் அகில இலங்கைத் தமிழ்காங்கிரசின் கிளிநொச்சியின் கிளைத் தலைவரானார். 1973ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து சமாதான நீதிவானாக சேவையாற்றினார்.

G.G பொன்னம்பலத்தின் காலத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு கரைச்சி கிராம சபையின் உறுப்பினராகவும் இக்கிராம சபையின் உப தலைவராகவும் மக்களுக்கு சேவையாற்றினார்.

பின்பு ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளினால் காங்கிரசும் தமிழரசுக்கட்சியும் இணைந்து அதன் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்டு மாவட்ட சபை உறுப்பினராக மக்களுக்கு பணியாற்றினார்.

இதற்கு முன்னதாக 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசியல் சூழ்ச்சியால் சூழ்நிலையால் சிறை செல்லும் சூழ்நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணம் கோட்டை சிறைச்சாலையில் 31 நாட்கள் அடைக்கப்பட்டு நிரபராதியாக மீண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் நினைவுபடுத்தும் முகமாக 1981ஆம் ஆண்டு மாவட்ட சபை தேர்தல் பிரச்சாரத்தின் போது பரந்தனில் ஞானப்பிரகாசம் ஞானசேகர குடும்பத்தினரால் யாழ் கோட்டை வடிவில் பரந்தனில் மேடை அமைக்கப்பட்டு பிரச்சார் மேற்கொள்ளப்பட்டது.

இத்தேர்தலில் 29000 வாக்காளர்கள் உள்ள கிளிநொச்சி வாக்குகளில் கிருஸ்ணராஜா அவர்கள் 22000 வாக்குகளைப் பெற்று அதாவது பெரும்பான்மை கிளிநொச்சி மக்களின் வாக்குகளைப் பெற்று மாவட்ட சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் சூழ்நிலையும் அனர்த்தமும் காரணமாக 1986ஆம் ஆண்டுப் பகுதியில் இந்தியாவிற்குச் சென்று அங்கு முப்பது வருடங்கள் வாழ்ந்தார். அங்கு வாழும் காலத்தில் யுத்தச் சூழ்நிலையால் இந்தியா சென்ற மக்களுக்கு பல்வேறு உதவிகளையும் சேவைகளையும் ஆற்றினார்.

அங்கு இவர் செய்த உதவிகளும் சேவைகளும் பலபேராலும் இன்று நினைவுகூரப்பட்டு நன்றி பாராட்டப்படுகிறது.

பின்பு 2015ஆம் ஆண்டு மீண்டும் கிளிநொச்சிக்கு வருகை தந்து தனது வாழ்வின் பயன் அனைவருக்கும் கிடைக்க கூடியதாக பணி தொடர்ந்தார்.

மேலும் கிளிநொச்சிப்பிரதேசம் தனி மாவட்டமாக உருப்பெறுவதற்கும் அங்கு புத்திஜீவிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், மற்றும் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், அரசியல் வாதிகள் பலர் உருவாவதற்கும் காரணமானவர்களில் கிருஷ்ணராஜா ஐயா அவர்கள் மிக முக்கியமானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் இருந்த காலப்பகுதியில் விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தார்.

1978ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து திரைப்படக் கலைஞர்களான தங்கவேலு, பாடகர் மலேசியா வாசுதேவன், V.K இராமசாமி, சுருளிராஜன் ஆகியோரை கிளிநொச்சிக்கு அழைத்து வந்து முற்றவெளி மைதானத்தில் கலை நிகழ்ச்சிகளை நடாத்தினார்.

கிளிநொச்சியில் முதன் முதல் மின்னொளியில் வலைப்பந்தாட்ட போட்டிகளை நடாத்திய பெருமை அவரைச் சேரும். மேலும் கிளிநொச்சி மாவட்ட விவசாயங்களுக்கு பலமானிய உதவிகள் கிடைப்பதற்கு வழி செய்தவர்.

1977ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது உள்நாட்டில் அகதிகளாக இடம் பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்த மலையகத் தமிழர்களுக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்தார் அதனை நன்றியுடன் நினைவுகூரும் முகமாக குடியமர்ந்த கிராமங்களில் ஒன்றாக கிருஸ்ணராஜா என்ற பெயரில் கிருஸ்ணா என்ற முதல் பெயருடன் "கிருஸ்ணபுரம்" என்ற பெயர் சூட்டி அப்பிரதேச மக்கள் மகிழ்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு கிளிநொச்சி மக்களுக்கு உதவிக்கரமாக நின்றார்.

மேலும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு அரசு வழங்கும் மானியங்களை சமனாகப் பகிர்ந்தளிக்க ஆவன செய்தார்.

அவரது நடை உடை பாவனை என்றும் மிடுக்கானது. அவரது உரையாடும் பண்பு அழகானது. ஆச்சரியத்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இந்தப் பண்புகளால் நீதிமன்றம் செல்ல இருந்த பல காணிப் பிணக்குகள் மற்றும் பாசப் பிணக்குகள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டன. இதன் மூலம் அவரை நீதிமானாக மக்கள் கொண்டாடினார்கள்.

வீட்டிற்கு எவர் வந்தாலும் நின்று வரவேற்கும் அவரது பண்பு, பிறரது மனம் வருந்தாது உரையாடும் மாண்பு, சிறு பிள்ளைகளைக் கூட நீ, நான் என்று அழைக்காத அவரது குணவியல்பு அவரை கிளிநொச்சி மாவட்டத்தின் அகிம்சா மூர்த்தியாக வாழ்ந்து 83 வது வயதில் சுகயீனம் காரணமாக 21.03.2022 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கிருஸ்ணராஜா அவர்களின் ஆன்மீக நெறி

இயல்பிலேயே சாத்வீக குணம் நிறைந்த கிருஸ்ணராஜா அவர்கள் மிகுந்த ஆன்மீக ஈடுபாடு உடையவர். அந்த வகையில் அவர் விரும்பி வழிபட்ட ஆலயங்கள்:

### குளத்தடி ஐந்தடிவான் வைரவர் கோயில்

மிகுந்த ஆபத்து நிறைந்த வேளைகளில் எல்லாம் இந்த வைரவப் பெருமான் அவரைக் காப்பாற்றியிருக்கிறார். நாள்தோறும் வைரவரை மனதால் வழிபடும் தெய்வம் இந்த வைரவப் பெருமான் ஆவார்.

### குலதெய்வமான மூளாய் பிள்ளையார் கோயில்

ஐயாவின் குலம் தழைத்தோங்கவும், சிறப்புடன் வாழவும் அவரது குலதெய்வ வழிபாடும் ஒரு காரணம். அந்த வகையில் மூளாய் பிள்ளையார் கோயிலுக்கு அடிக்கடி சென்று வழிபடும் அவரது வாழ்வியல் நெறி போற்றப்படக் கூடியது.

பிள்ளையார் கோயில் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் பகுதியில் அமைந்த மூளாய் கிராமத்தில் அமைந்துள்ளது. இவ் ஆலயத்திற்கு அருகே முருகன் கோவிலும் அமைந்துள்ளது. இரு ஆலயங்களது தேரும், தேரோடும், வீதியும் ஒன்றாக இருப்பது குறிப்பிடத்தக்கது. மகனுடன் கிருஷ்ணராஜா மூளாய் ஆலயத்தில்

### இரணைமடு திருவருள்மிகு ஸ்ரீகனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

இலங்கையின் வடக்கே கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு நீர்த் தேக்கத்தினைத் தீர்த்தமாக கொண்டு அதனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது கரையிலே அமைந்துள்ள கோயில். இங்கு அன்னை பராசக்தி வலது கரத்திலே கிளியினை ஏந்தியபடி நின்ற திருக்கோலத்தில் "கனகாம்பிகை" என பெயர் தாங்கி மூல தெய்வமாக உள்ளார்.

**வரலாறு**

ஐம்பதுகளின் மத்தியில் கிளிநொச்சியில் பல குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. அக்காலப் பகுதியில் கிளிநொச்சியில் பல கிராமங்கள் தோன்றின. கிராமங்களில் குடியேறியவர்கள் பல ஆலயங்களையும் அமைத்து வந்தனர். அந்த வகையில் அக்காலப்பகுதியில் வாழ்ந்த யோகர் சுவாமிகளது அருள்வாக்கினாலும், ஆலோசனையாலும், வழிகாட்டுதலாலும் அக்காலப்பகுதியில் வாழ்ந்த பெரியோர்கள் சிலரது முயற்சியில் 1957ஆம் ஆண்டு இரணைமடுகுளத்தின் இடது கரையில் 13.5 ஏக்கர் காணியில் ஒரு வேப்பமரத்தின் கீழ் சிறு குடிசையால் ஆலயம் அமைக்கப்பட்டது. இதில் தற்போது ஒன்பது ஏக்கர் காணி மட்டுமே ஆலய நிர்வாகத்தின் கீழ் காணப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி குளத்தடி ஐந்தடிவான் வைரவர் ஆலயம்




## கிளிநொச்சி இரணைமடு கந்தசுவாமி ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மூளாய் பிள்ளையார் ஆலயம்




கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தந்தையினை நினைவு கூறுகின்றோம்

சிறந்த பண்பாளர், திறமைசாலி, தொலைநோக்கு சிந்தனை கொண்டவர். அனைத்து விடயங்களையும் நிர்வகிக்கும் திறமை கொண்டவர். சிறியவர், பெரியவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என அனைவரிடத்திலும் அவர்களிற்கு உரிய மதிப்பு அளித்து நட்புடன் பழகக் கூடியவர். அவரது மனைவி (அம்மா) பிள்ளைகளாகிய எங்கள் மூவரிடத்திலும் மிகுந்த அன்பு கொண்டவர்.

அவருடைய விருப்பங்கள் தான் எங்கள் விருப்பம், எங்களுடைய விருப்பங்கள் தான் அவரது விருப்பங்கள் என வாழ்ந்தவர். மிகவும் நல்ல மனிதர் எங்களையும் தன்னுடைய நண்பர்கள் போல் பாவித்துத் தான் இவ்வளவு காலமும் நாங்களும் அவருடன் பயணித்தோம். அவரைப் பற்றி எழுதுவதனால் எழுதிக் கொண்டே போகலாம். இப்படியான ஒருவர் எமக்கு தந்தையாகக் கிடைத்ததில் நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

இத் தருணத்தில் அவரை இழந்து துயரில் இருக்கும் எம் அனைவரிற்கும் ஆறுதல் அளித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவரிற்கும் மனமார்ந்த நன்றிகள். அப்பா எமது வாழ்வில் நாங்கள் வாழும் வரை என்றும் எங்களுடன் இருப்பார். எங்கள் அனைவரது அன்பும் என்றும் அவரிற்கு இருக்க இறைவனை வேண்டுகிறோம்.



-என்றும் அன்புடன்
மகள்
மேகலா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவையாற்றின் செம்பொற்சோதி

புன்னகைக்கும் போதினிலே
புதுமை கண்டோம்
புரிகின்ற சோலையிலே
நிறைவைக் கண்டோம்
பண்ணுகின்ற பணிகள் தனில்
பகைமை இல்லா
பக்குவத்தின் தன்மையினால்
நிறைவைக் கண்டோம்.

ஊருக்காய் உழைப்பதிலே
உயர்வு கண்டோம்
பேருக்காய் எதையுமே
செய்தாய் இல்லை
யாரென்று முகம் பார்த்து
உதவ இல்லை
பேர் புகழை எதிர்பார்த்து
ஏதும் செய்யவில்லை.



இரப்பார்க்கு ஈவதிலே
வள்ளல் ஆனாய்
கரவில்லா மனதினனாய்
நிதமும் வாழ்ந்தாய்
புறம் பேசா நற்குணத்தால்
நிறைவாய் என்றும்
அறம் காத்த காவலனே!
கிருஸ்ணராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவற்ற வாழ்வுக்கு
சாட்சி நீதான்
நிதானமான நட்புக்கு
உதாரணம் நீ
குணம் நிறைந்த குழந்தைகளின்
தந்தை ஆனாய்
குற்றமற்ற மனை அறத்தில்
நிறைவும் பெற்றாய்.



இல்லை என்று சொல்லாத
இயல்பு என்றும்
நல்ல மனம் கொண்டோரை
நாடி நிற்கும்
தொல்லை பல நெருக்கினாலும் தன்
துயர்மறந்து உதவி நிற்கும்
நல்ல உள்ளம் கொண்டவரே
கிருஸ்ணராஜா!

நாடு உயர்ந்து நலம் காண
நாளும் சேவை
நடமாடும் சேவகனாய்
வாழ்ந்தாய் அன்று
பீடுநடை பெருவாழ்வு
வாழ்ந்த போதும்
பெருமையற்று உதவுவதை
மூச்சாய் ஏற்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளாய் ஆகிவந்த மக்களுக்கு
அன்புக் கரம் தனை நீட்டி
வகை தொகையாய் வந்தாலும்
வருந்திக் காத்து
நிறைவாக உணவளித்து
நிலமும் ஈந்து
முறையாகக் குடியமர்த்தி
உதவி செய்தாம்.

"அம்மாம்பி" நாமம் என்றும்
அடிமனதில் தொட்டு நிற்க
எம் . "எம். பி " என்று இன்றும்
பலபேர் சொல்வார்
கிளிநொச்சி மண் என்றும்
மறவாது உன்னை
கிருஷ்ணராசா திருவையாற்றின்
செம்பொற் சோதி

"தொண்டர் தம் பெருமை
சொல்லவும் முடியுமோ"

- வன்னிமுருகேசு
வன்னி மலர்க்காடு
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தன் உயிர் பிரிவதைப் பார்த்தவர் இல்லை என் உயிர் பிரிவதைப் பார்த்தேன்”

ஏறக்குறைய 62 ஆண்டுகள் நம் உறவு நீடித்தது. உற்றார் உறவினர் என்றாலும் சரி நண்பர் விரோதிகளாக இருந்தாலும் சரி மன்னிக்கவும் அவருக்கு விரோதிகள் என நான் அறிய எவரும் இருக்கவில்லை. அநேகரின் சுகதுக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வார். அண்ணன் தம்பி என்ற எமது உறவுக்கு இலக்கணம் வகித்த என் உடன் பிறவா தம்பிகிட்டு இன்றில்லை என்ற போதிலும் அவர் விட்டுச் சென்ற அடையாளங்கள் பல நீடித்துநிற்கும் .

விளையாட்டுத்துறையில் மிக்க ஆர்வமுடையவர். குறிப்பாக கிறிக்கட் விளையாட்டில் காட்டிய திறமையினால் இளைஞர் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றுக் கொடுத்தார். வழக்கறிஞரில் ஒருவரான அவரின் தந்தையார் தனக்கு சொந்தமான விவசாய காணியை பராமரிக்க இவரை அடிக்கடி கிளிநொச்சிக்கு அனுப்பியதால் விவசாயத்தில் அவர் கவனம் திரும்பியது. கிளிநொச்சி வாழ் விவசாயிகளுடன் இணைந்து அவர்கள் சம்பந்தமான போராட்டங்களில் கலந்து கொண்ட பின் படித்தவாலிபர் திட்டத்தின் கீழ் குடியேறி நூற்றுக்குமேலான இளைஞர்களிற்கு வழிகாட்டியாக செயற்பட்டார். அநத இளைஞர்களால் போற்றி மதிக்கத்தக்க தலைவனாகவும் திகழ்ந்தார்.

1960ஆம் ஆண்டு என்னை கிளிநொச்சியில் கொண்டு வந்து நிறுத்திய பொழுது அன்னார் ஜீ ஜீ பொன்னம்பலம் அவர்களின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் கிளைத்தலைவராக செயற்பட்டு வந்தார். இருவரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் அக்கறைகொண்ட கரைச்சி கிராம சபைத்தேர்தலில் வெவ்வேறு கட்சிகளில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றோம். அன்னாரின் ஐந்து பேர் கொண்டகுழுவினர் தந்தஆதரவினால் நான் கரைச்சி கிராம சபையின் தலைவராகவும் அன்னார் உப தலைவராகவும் தெரிவானோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கிராம சபை தலைவராக இருக்கும் பொழுது அன்னார் உப தலைவராகவும் பின்னர் கிளிநொச்சி பட்டின சபை உப தலைவராகவும் அதன் பின் மாவட்ட சபை உறுப்பினராகவும் செயற்பட்டு பல துறைசார்ந்து தொண்டாற்றியிருந்தார். நான் இன்றேல் அவரும் அவர் இன்றேல் நானும் இல்லை எனும் நிலை கிளிநொச்சியில் உருவாகி மக்கள் மத்தியில் பரவியிருந்தது.

இன்று நாம் காணும் கிளிநொச்சி அன்று வேறாக இருந்தது. கிளிநொச்சி பட்டினப்பகுதி பெரும்பகுதி காடாகவே இருந்தது. காட்டினை வெட்டி காணிகளாக்கிய பெருமை அன்னாரையே சாரும். மக்களின் குடியேற்றத்திற்கு பெரும்பான்மையான உதவிகளைச் செய்தார். ஏழை விவசாயிகளிற்கு காணியினை உழுதும் விதைத்தும் கொடுக்க கூடிய மனப்பாங்கினைக் கொண்டிருந்தார். சமாதான நீதவானாக செயற்பட்டு இறுதிக்காலம்வரை பலருக்கு உதவினார்.

நாட்டில் ஏற்பட்ட இன கலவரங்களினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு கிளிநொச்சி மண் கரம் நீட்டி அணைத்துக் கொண்டது. அன்னார் உள்ளிட்ட இளைஞர்களின் துடிதுடிப்பான செயற்பாடுகளால் மூன்று சந்தர்ப்பங்களில் கலவரங்களால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சிக்கு வந்த மக்களிற்கு உணவளித்து பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதில் பெரும் அக்கறை செலுத்திக் குடியேற்றம் செய்தார்.

பின்னர் விவசாய மண்ணைத் தேடிவந்த மக்களை இங்கேயே குடியேற்றி அவர்களிற்கு பாதுகாப்பினையும், வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் மத்தியில் எழுந்த சிந்தனைக்கு உருவம் கொடுத்தவரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் பங்கும் உள்ளது. பொன்னகர், ஆனந்தநகர், ஆனந்தபுரம் என்ற நீண்ட வரிசையில் கிருஸ்ணபுரம் என்ற கிராமத்தில் கிருஸ்ணபுரம் என்ற கிராமத்தில் கிருஸ்ணராஜாவின் பெயர் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

துடிதுடிப்பான தூரநோக்குசிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த கிருஸ்ணராஜாவின் செயற்பாடுகளைக் கணித்த இளைஞர்கள் அவரின் புனைபெயருடன் குறித்த கிராமத்தினை உருவாக்கியிருந்தமையையும் யாரும் மறுக்க முடியாது. அன்னார் தனிப்பட்ட முறையில் கூட்டாகவும் ஆற்றிய தொண்டுகள் கணக்கில் அடங்காது. கிருஸ்ணராஜாவின் இழப்பு கிளிநொச்சி மண் இழந்தபெரும் இழப்புக்களில் ஒன்றாகவே நான் பார்க்கின்றேன்.

அன்னாரின் இழப்பைத் தாங்க முடியாது உள்ள குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களிற்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வீ. ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ஒரு இந்தியன்.

ஏறக்குறைய 1994 ஆண்டு முதல் 2021 வரை இந்தியாவில் இருந்தது வரை எங்கள் நட்பு நீடித்தது. பிறகு இலங்கை சென்றும் எங்கள் நட்பு டெலிபோனில் நீடித்தது.

நான் பார்த்த இலங்கைத் தமிழர்கள். இவரைப் போல் கண்டதில்லை. இனி காணப்போவதும் இல்லை. காரணம் இலங்கை போர் நடந்த பொழுது தமிழர்கள் படகு மூலமாக இந்தியா வந்தால் அவர்கள் தேடுவது கிருஷ்ணராசாவின் டெலிபோன் நம்பர்தான். ஏன் என்றால் அவரிடம் போனில் பேசி விட்டால் அவரிடம் இருந்து அனைத்து உதவிகளையும் பெற்று விடலாம் என்ற நம்பிக்கையில் வருவார்கள்.

இலங்கைத் தமிழர்கள் வீட்டில் நல்லது நடந்தாலும் கெட்டது நடந்தாலும் அங்கு கிருஷ்ணா அண்ணன் முதலில் இருப்பார். எனக்குத் தெரிந்த வரையில் இந்தியா வந்த இலங்கைத் தமிழர்கள். 50 வீதம் இவரை நாடி வந்து உதவி பெற்றவர்கள்.

கிருஷ்ணா அண்ணன் வீட்டில் வந்து சந்தித்து விட்டால் இவர் அவர்களை உணவு அருந்தவைத்துவிட்டுதான் அனுப்பி வைப்பார். இலங்கைத் தமிழர்களுக்கு இரவு, பகல் பாராமல் அவர்களுக்கு உதவி செய்வார். வெளி நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் எக போக உதவி செள்துள்ளார்.

சுருக்கமாகச் சொல்லப் போனால் இலங்கைத் தமிழர்கள் ஒரு நல்ல மா மனிதனை இழந்து விட்டனர்.

நன்றி

S. சக்திவேல்,
சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த சமூக சேவையாளனைப் பிரிந்து வருந்துகின்றோம்.

"தோன்றிப் புகழோடு தோன்றும் அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க வாழ்ந்து காட்டியவர் அமரர் அண்ணர் இ.கிருஸ்ணராசா அவர்கள். தனக்கென வாழாமல் பிறர்க்குரியவனாக தன்னையே மாற்றி தன் வாழ் நாள் முழுவதும் ஓய்வில்லாமல் அவரது இறுதிக் காலம் வரை செயற்பட்டுவந்தார். பொதுமக்கள் சேவை என்பது அவரது இரத்தத்தில் ஊறிய ஒன்றாகும் ஆடம்பரமாக வாழ விரும்பாத ஒரு நேர்மையான உள்ளம் கொண்ட இவர் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை தன் வாழ் நாள் முழுவதும் தன்னையே மெழுகுவர்த்தியாக மாற்றி ஊருக்கே ஒளிகொடுத்து வாழ்ந்து பொது சேவையுடன் அரசியலில் ஈடுபட்டார்.

கிளிநொச்சி தனி மாவட்டமாக உருப் பெறுவதற்கு எனது மதிப்பிற்குரிய ஆசானும் முந்நாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.வீ ஆனந்தசங்கரியுடன் இணைந்து பெரும் போராட்டம் நடாத்தி தனி மாவட்டமாக உருப்பெறுவதில் பெரும் பங்களிப்பை செய்து வெற்றியும் கண்டார். 50 வருடங்களுக்கு முன்பதாக திருவையாறு படித்த வர்களின் திட்டம் உருவாக்கப்பட்ட போது நாம் இருவரும் மூன்றாம் இலக்க காணிகளை பெற்ற நிலையில் அன்றிலிருந்து அமரர் அவர்கள் எனது உடன்பிறவாத அண்ணனாக, நண்பனாக, எனது வழிகாட்டியாக இருந்த பசுமையான காலத்தையும் அவரது உதவிகளையையும் மீட்டிப்பார்த்து கலங்கிய நிலையில் அன்னாரின் பிரிவால் கவலையில் துவளும் அன்பான மனைவி அவரது பிள்ளைகள் அனைவரக்கும் ஆறுதல் கூறி நிற்பதோடு அவரது ஆத்மா நித்தியப் பேரின்பம் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பொன்.தில்லைநாதன் (JP)
ஓய்வுநிலை அதிபர்
முந்நாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ :021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

*2022.04.11.*

## கிளிநொச்சி மண்ணின் மூத்த அரசியல் தலைவர் அமரர். இ. கிருஸ்ணராஜா அவர்கள்

யாழ்ப்பாணத்தின் மூளாய் மண்ணைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி மாவட்டத்தின் போரான திருவையாறுக் கிராமத்தை வதிவிடமாகவும் கொண்ட கிளிநொச்சி மண்ணின் மூத்த குடிமகனும், கிராம சபை மற்றும் பட்டின சபைகளின் உப தலைவரும், மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினராக இருந்து இந்த மண்ணின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவருமான அமரர் இ.கிருஸ்ணராஜா ஐயா அவர்களின் இழப்பு, இந்த மாவட்டத்திற்கு நேர்ந்திருக்கும் பேரிழப்பு.

எனது தந்தையார் திரு. சின்னத்துரை சிவஞானம், மாமனார் திரு.கந்தையா பொன்னுத்துரை (சுப்பையா) ஆகியோரின் நெருங்கிய நண்பராக, எனக்கும் அவருக்குமிடையே குடும்பரீதியான உறவுநிலை இருந்தபோதும், தனது சிந்தனை, செயல்களின் வழி இந்த மாவட்டத்தை நேசித்த தனிப்பெரும் மனிதனாக வாழ்ந்த அவரின் வாழ்க்கைமுறை என்மட்டில் அவருக்கென்றோர் மதிப்பையும், மரியாதையையும் உருவாக்கியிருந்தது. அந்த மனோநிலை தான் அவருக்கும் எனக்குமிடையே இருந்த மிக நெருக்கமான உறவுநிலைக்குக் காரணமாயிற்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் முதுபெரும் அரசியல் தலைவரான இவருக்கு கிளிநொச்சியின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் கணிசமான பங்குண்டு. தசாப்தகாலப் பிரயத்தனங்களின் பின்னர் கிளிநொச்சி தனித்த நிர்வாக மாவட்டமாகப் பிரிக்கப்பட்டதன் பின்னணியில் கிருஸ்ணராஜா ஐயாவின் பங்கும். பணியும் அளப்பரியது. 1950களின் பின்னரான அரசியல் வரலாற்றில் கிளிநொச்சி மாவட்டத்திற்கென்றோர் தனித்துவமான அரசியல் கலாசாரத்தைக் கட்டிவளர்த்த பெருமையும் இவரையே சாரும். இந்த மாவட்டத்தின் நிமிர்வுக்காக நெஞ்சுரத்தோடு நீடித்துழைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் பணியை நினைவுகூரும் நோக்கில், கிளிநொச்சி மாவட்டத்தின் குடியேற்றக் கிராமங்களுள் ஒன்றான கிருஸ்ணபுரம் கிராமத்திற்கு அவரின் பெயரினால் பெயரிடப்பட்டுள்ளமை கிளிநொச்சியின் வரலாற்றில் அவர் பதித்திருக்கும் அழிக்கமுடியாத ஆழ்தடங்களுக்கான எடுத்துக்காட்டே. ஈழ விடுதலைப் போராட்ட காலத்திலும் சரி. இன விடுதலைப் போர் மௌனிக்கப் பட்டதற்குப் பின்னரான இன்றைய காலகட்டத்திலும் சரி என்றுமே எமது மக்களுக்காய் ஓங்கி ஒலிக்கும் மக்களின் குரலாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களின் உள்ளத்திலும் உணர்விலும் இரண்டறக் கலந்திருந்த இனத்துவ உறவாகவே இவர் தன் இறுதிக் காலம்வரை வாழ்ந்து மறைந்திருக்கிறார்.

நேரிய சிந்தனையாற்றல், செயற்றிறன், பணிவு, இன, மொழிப்பற்று, சேவைநோக்கு மனதாலும் பிறர்க்கு தீங்குநினைக்காத கருணை உள்ளம் என தனக்குத்தானே வரித்துக் கொண்ட வாழ்க்கைப் பாதையில் இருந்து சற்றும் பிறழாது கைக்கெட்டும் தூரத்தேயிருந்த வசதிமிக்க வாழ்க்கை முறையைப் புறந்தள்ளி தன் ஊரில், தான் நேசித்த மக்களோடும், தன்னை நேசிக்கும் மக்களோடும் இரண்டறக்கலந்திருக்க விரும்பிய அவரின்ஆழ்மன அவா கைகூடி தன் சொந்த மண்ணிலேயே இறுதிக்காலத்தை கழிக்கும் பெரும்பேறு அவருக்கு வாய்க்கப் பெற்றிருந்தமை வரமே.

தான் வாழ்ந்த காலம் முழுமையையும் தேச நலனுக்காய் அர்ப் பணித்ததோடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆணிவேராக இருந்து எந்தக் கட்சிக்கும், கட்சி நலன்களைக் கடந்து இந்த மாவட்டத்துக்கும் மகத்தான பணியாற்றி, இவ்வுலக வாழ்வை நீத்த அன்னாரின் ஆத்மா அமைதி பெறப் பிரார்த்தித்து அவரது இழப்பின் துயர் சுமந்திருக்கும் குடும்பத்தினரின் துயரில் நானும் பங்குகொள்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி

682, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
කරච්චි ප්‍රාදේශීය සභාවල කිලිනොච්චිය
KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI
A -9 நெடுஞ்சாலை, கிளிநொச்சி. A- 9 Road, Kilinochchi
E-Mail:- kilinochchi1kps@gmail.com

எனது இலக்கம் My No මගේ අංකය

திகதி Date 11.04.2022 දිනය

## நன்னெறி அரசியலின் நயம் மிகு வழிகாட்டி கிருஸ்ணராஜா அண்ணன்.

எனது அன்புக்கும், மதிப்புக்குமுரிய திருவாளர் இளையதம்பி கிருஸ்ணராஜா அவர்கள் சிவபதப்பேறடைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றோம். "பிறப்பொன்று உளதோ, இறப்பு அதன் நியதி" என்ற வாழ்வியல் தத்துவத்தை இலகுவாக கடந்துசெல்ல முடியாத ஒரு பெருமனிதராக கிருஸ்ணராஜா அண்ணன் என் கண்முன்னே நிற்கிறார்.

நான் எனது சிறுபராயத்திலிருந்து அவரது மகனான ரவி என அழைக்கப்படும் திரு.கிருஸ்ணராஜா ரவிக்குமார் அவர்களுடன் கிளி/கனிஸ்ட வித்தியாலயத்தில் கல்விகற்ற காலம். அப்போது ஒருநாள், பாடசாலையின் முதலாவது மாடிக்கட்டடத்தை நிர்மாணிக்கும் பணிகளுக்காக கிருஸ்ணராஜா அண்ணன் அவர்கள் எமது பாடசாலைக்கு வருகைதந்தபோது நான் முதன்முதலில் அவரைப் பார்த்தேன். அவரது கம்பீரமான தோற்றமும், நெகிழ்ச்சியான உரையாடலும், அவரது தலைமைத்துவத்தின் மீது அன்று எனக்கு வசீகரத்தை ஏற்படுத்தியமை இன்றும் நினைவில் உள்ளது.

கிளிநொச்சியின் அரசியல் வரலாறு, ஆரம்ப காலங்களில் சவால்களும், சுவாரஸ்யங்களும் மிகுந்ததாக அமைந்திருந்தது. சில சந்தர்ப்பங்களில் வன்முறை இலக்கின் மூலம் ஜனநாயகத்தின் விழுமியங்களை சுவைக்க முனைந்தவர்கள் மத்தியில்தான் இவருடைய அரசியற்பாதை செயலுருப்பெற்றிருக்கின்றது. கிராமசபை மற்றும் மாவட்ட அபிவிருத்தி சபை என்பவற்றின் மக்கள் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்ட இவர் ஆற்றிய பணிகள் காலத்தினால் காவிச்செல்லப்பட்டு நினைவுகூரத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக, ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சிக்கு குடிவந்த இவர், கிளிநொச்சியில் கிருஸ்ணபுரம் உள்ளிட்ட குடியேற்றக் கிராமங்களை உருவாக்குவதில் முன்நின்றவர். அத்தகைய சேவையின் நன்றியுணர்வாகவே அவருடைய பெயரால் அக்கிராமத்திற்கு "கிருஸ்ணபுரம்" என்ற நாமம் சூட்டப்பட்டமை வரலாற்றின் பதிவாகும். பல அரச சேவையாளர்கள் அரசதுறைகளுக்குள் உள்வாங்கப்பட்டு, கிளிநொச்சியின் சேவைத்துறைகள் விசாலம் பெறுவதற்கும், அதன் விளைவாக கிளிநொச்சிப் பிராந்தியம் தனிமாவட்டமாக உருவாகுவதற்கும் இவர் ஆற்றிய பங்களிப்புக்கள் அற்புதமானவை.

எல்லாவற்றுக்கும் மேலாக, தாயக விடுதலைப் போராட்டம் எமது மண்ணில் வீரியம் பெற்றிருந்தபோது அதற்கு மதிப்பளிக்கும் பரிபக்குவம் மிக்க தீர்மானத்தோடு செயற்பட்டிருந்தமை, அவரது அரசியல் நுண்பார்வையின் வெளிப்பாடாகும். இவற்றுக்கு அப்பால், இல்வாழ்வில் சிறப்பும், நற்புத்திரப்பேறும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்த இவர் தன்னுடைய நல் எச்சங்களாக தாய்மண்ணை நேசிக்கின்ற தவப்புதல்வர்களை இந்த மண்ணுக்காக அளித்திருப்பது, கிருஸ்ணராஜா அண்ணன் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்பதை அடையாளப்படுத்துகின்றது.

பல தசாப்த காலமாக மண்ணோடும், மக்களோடும் இணைந்தும் பிணைந்தும் வாழ்ந்து, அதனால் இன்புற்று, சமூக வாழ்விற்கு மேன்மை நல்கி, வரலாற்றிலும் மக்கள் மனங்களிலும் தூய்மையான மனிதனாக இடம்பெற்று வாழ்ந்து, இவ்வுலகை நீத்த கிருஷ்ணராஜா அண்ணன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கனகாம்பிகைத் தாயின் பாதக்கமலங்களை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

அருணாசலம் வேழமாலிகிதன்
தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் போற்றும் உத்தமனாய் வாழ்ந்திருந்த அமரர் இளையதம்பி கிருஸ்ணராசா

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படும் இலங்கைத் தீவின் யாழ்ப்பாணக் குடாநாட்டு வட்டுக்கோட்டையில் திரு.திருமதி இளையதம்பி சிவனேஸ்வரி அவர்களின் புதல்வனாக **28.08.1939** இல் பிறந்தவரே கிருஷ்ணராசா அவர்கள்.

வழக்கறிஞரில் ஒருவரான அவரின் தந்தை அமரர் இளையதம்பி அவர்கள் தனக்கு சொந்தமான விவசாயக்காணிக்கு பராமரிக்க அடிக்கடி அனுப்பியதால் அவரின் கவனம் விவசாயத்தில் கவரப்பட்டு விவசாயியாக இம் மக்களுடன் இணைந்து வாழ்ந்தார். அத்துடன் அதில் இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் கிளிநொச்சி கிளை தலைவராகவும் செயற்பட்டார்

அதன் பின் கிராம சபை தேர்தலில் போட்டியிட்டு கிளிநொச்சி கிராம சபையின் உப - தலைவரானார்

அதன் பின் கிளிநொச்சி பட்டணசபை தேர்தலில் போட்டியில் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு பெரும் சேவை புரிந்தார்.

அதன் பின் யாழ்ப்பாண மாவட்ட சபை தேர்தலில் கிளிநொச்சி தேர்தல் தொகுதியின் மாவட்ட சபைத் உறுப்பினராகப் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்று உறுப்பினராகி மக்களுக்கான சேவை செய்தார்.

நெருக்கடியான காலங்களின் பலவிதமான சவால்களுக்கு முகம் கொடுத்து அவலம் என இலங்கையின் தெற்கு மலையக மக்கள் இங்கு வந்து தஞ்சம் அடைந்த போது இன்முகத்துடன் அரவணைத்து அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து அவர்களை இம் மண்ணில் குடியமர்த்தி அவர்களின் சுய தொழில்களை ஊக்கிவித்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு என்பது பல அனுபவங்கள் பரிசோதனைகள் ஆகும். இவரது வாழ்வு முழுவதையும் கிளிநொச்சி மக்களினது வளர்ச்சியோடும் வரலாற்றோடும் இரண்டறக்கலந்து இருந்தமை அனைவரும் அறிந்ததே. வயற்புல பண்பாட்டின் தளத்தில் இருந்து கட்டமைக்கப்பட்ட திருவையாறு கிராம மக்களோடு மக்களாக வாழ்ந்திருந்து எப்போதும் சிரித்த முகத்துடனும் மாற்றான் துன்பம் கண்டு நெகிழும் உண்மை நேருக்கு நேர் சொல்லிவிடும் நெஞ்சுரம், மனத்தால் பிறருக்கு தீங்கிழைக்காத மனிதப்பண்பாடு இனிய மொழி பேசி இதமாகக் கவர்வதும் இவரது ஆளுமைக்கு அணி கலன்களாகும்.

இந்த உன்னத அணிகலன்களோடு இறை பக்தி தவறவிடவில்லை சைவத்தையும் தமிழையும் நேசித்து மக்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வலுச்சேர்த்து வாழ்ந்திருந்த அமரர் இ.கிருஷ்ணராசா அவர்களின் இழப்பென்பது அவரது குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்பல்ல. ஒட்டு மொத்த கிளிநொச்சி மக்களின் ஒன்றிக் கலந்து நின்ற ஒரு உயரிய மனிதனின் இழப்பாகவே என்னால் பார்க்க முடிகின்றது.

வாழும் காலம் முழுவதும் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த அமரரின் திடீர் மறைவால் துயருற்று இருக்கும் அவரது துணைவியார், பிள்ளைகள், உறவினர்களின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களை பணிந்து நிற்கின்றேன்.

கந்தையா தர்மலிங்கம்
ஒய்வு நிலை கிராம அலுவலரும்,
கரைச்சி பிரதேச சபை உறுப்பினரும்,
கிளிநொச்சி.
302, அம்பாள்குளம், கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகண்ணா "மக்கள் குரல்"
## தமிழிசை வர்த்தக ஒலிபரப்பு சேவை

எங்கள் அண்ணர் அமரர் இளையதம்பி கிருஷ்ணராசா அவர்கள் மறைந்தும் மறையாத ஒரு மாமனிதர். மக்கள் தோழனாகவும் ஏழை மக்களின் மனங்களை வென்று மனிதம் என்கின்ற பண்புக்கு இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர். எங்கள் அண்ணர் அமரர் இ.கிருஷ்ணராசா. இன்று நேற்றல்ல பல தசாப்தகாலம் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேசமெல்லாம் தன் பணிசெய்த ஒரு சேவையாளர் அண்ணன் இ.கிருஸ்ணராசா.

முன்பு DRY ஆறு என அழைக்கப்பட்டு தற்போதைய திருவையாறு 1ஆம், 2ஆம், 3ஆம் பகுதிக்கென படித்தவாலிபர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட போது தனக்குத்தெரிந்த கிளி/மாவட்டத்திலுள்ள பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை வரவழைத்து அவர்களுக்கும் காணிகள் கிடைப்பதற்கு முன்னின்று செயற்பட்ட ஒரு தன்னலமற்ற சேவையாளர் அண்ணன் இ.கிருஸ்ணராசா அவர்கள்.

கரைச்சி கிராம சபை கிளி/பட்டினசபை இயங்கிய காலங்களில் இரு சபைகளிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு காலம் நேரம் பாராது தன்னாலான சேவைகளைச் செய்த ஒரு மக்கள் தொண்டன் அமரர் இ.கிருஷ்ணராசா அவர்கள்.

அரசியலில் ஆர்வம் கொண்டவராக இருந்தாலும் மக்களின் விருப்பத்துக்கு மாறாக செயற்படாதவர். கிளிநொச்சியை தனியாக ஒரு மாவட்டமாக உருவாக்க வேண்டும் என்று அன்று அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை மெற்கொண்டபோது அவருடன் தோளோடு தோள் நின்று கிளிநொச்சியை ஓர் நிர்வாக மாவட்டமாக மாற்றிய பெருமையில் அண்ணன் அமரர் இ.கிருஷ்ணராசா அவர்களுக்கும் பெரும் பங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் படித்த இளைஞர்கள், யுவதிகள் வைத்தியர்களாகவும் பொறியியளாளராகவும் அரச உத்தியோகத்தர்களாகவும் ஆசிரியர்களாகவும் நியமனங்களைப் பெற்றுக் கொடுத்து இணைந்து பணியாற்றுவதற்கு வழிகாட்டிய ஒரு பெருமகன் அண்ணன் இ.கிருஷ்ணராசா அவர்கள்.

சமாதான நீதவனாக பணியாற்றிய காலப்பகுதியில் எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என எவரிடம் எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் "என்பணி மக்கள் பணி செய்வதே" என்ற இலட்சியப்பற்றுடன் வாழ்ந்தவரும் வாழ்ந்து காட்டியவரும் அமரர்இ.கிருஷ்ணராசா என்றால் மிகையாகாது.

மேலும் கிளிநொச்சி நகரம் இருள் சூழ்ந்திருந்த காலம் பகுதியில் கிளி பாராளுமன்ற உறுப்பினருடன் இணைந்து பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் இருந்த கிளிநொச்சி நகருக்கு மின் இணைப்பையும் ஏற்படுத்தி மின்சாரத்தையும் பெற்று கிளிநொச்சி நகரத்தை ஒளியூட்டி பிரகாசிக்கச் செய்த பெருமையும் உரிமையும் அமரர் இ.கிருஷ்ணராசா அவர்களையும் அப்போதிருந்த பராளுமன்ற உறுப்பினரையுமே சாரும். இதனையாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

இது தவிர இன்றும் கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 5 வீட்டுத்திட்டம், 10வீட்டுத்திட்டம், 30வீட்டுத்திட்டம் என வீட்டுத்திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு பணி செய்தவர் அமரர் இ.கிருஷ்ணராசா அவர்கள். இதற்கு அப்போதிருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் அமரர் இ.கிருஷ்ணராசா மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பையம் ஆதரவுகளையும் வழங்கியிருந்தார்.

இது மட்டுமல்ல தென்னிலங்கையிலும் மலையகத்திலும் ஏற்பட்ட இனக்கலவரத்தால் சொல்ல முடியாத துன்பங்களை சுமந்து ஏதுமற்ற ஏதிலிகளாக அங்கிருந்து கிளிநொச்சிக்கு சாரை சாரையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த எம்மின உறவுகளை வரவேற்று அவர்களுக்கு உணவு உடை உறையுள் யாவற்றையும் கொடுத்து பராமரித்து முகாம்கள் அமைத்து தங்கவைத்து பராமரித்ததுடன் அம்மக்களுக்கு நிலையான வதிவிடங்களை அமைத்து வாழ்வாழ்வதற்கும் மிகப் பெரிய கைங்கரியங்களை செய்த பெருமகன் A9 விதியில் டிப்போசந்திக்கு அப்பால் இரணைமடு சந்தி வரை உள்ள அரச காட்டை மக்கள் காடு வெட்டி துப்புரவு செய்து வாழ்வதற்கும் வழிகாட்டிய ஒரு மகான். அவரும் அப்போதிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் காட்டிய வழிகாட்டலில் கிளி/பிரதேசத்தில் பலகிராமங்கள் உருவாகியது. இதில் குறிப்பாக ஆனந்தபுரம், ஆனந்தநகர், உதயநகர், அம்பாள்குளம் பாரதிபுரம், விநாயகபுரம், செல்வாநகர், குறிப்பாக கிருஷ்ணபுரம் இக் கிராமம் அமரர் இ.கிருஷ்ணராசா அவர்களின் அன்புக்குரிய மக்களால் அப்போது பெயர் சூட்டி இன்று அமரர் அவர்களின் பெயரை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றது என்றால் மிகையாகாது.

அன்னாரின் இழப்பு கிளிநொச்சி மாவட்டத்திற்கே ஒரு பேரிழப்பாகும் அவரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற போது அங்கு நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் அவருக்கு சிலை ஒன்று அமைக்க வேண்டும் என பலர் கோரிக்கை விடுத்தார்கள். ஒரு மனிதன் எப்படியும் வாழலாம் என்று வாழும் காலத்தில் இப்படித்தான் ஒரு மனிதன் வாழவேண்டும் என மனித நேயத்துடன் வாழ்ந்து காட்டிய ஒரு பெருமகன். “வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்ற வாக்கு உண்மையே அவருக்கு கூடிய விரைவில் அன்னாரின் உருவச்சிலையை அமைக்க இறைவனை வேண்டுவதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்ப உறவுகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் துக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

என்றும் மாறாத அன்புடன்
யோகன்
மக்கள் குரல் - கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஸ்ணராஜா அண்ணனுடனான என் இனிய நினைவுகள்

1966ஆம் ஆண்டு கிளிநொச்சியில் 100 படித்த வாலிபர்களைக் கொண்டு அரசினால் தொடங்கப்பட்ட DRY ஆறு திட்டத்தின் மூலம் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்தோம். பின்பு DRY ஆறு என்பதை திருவையாறாக மாற்றிய பெருமையும் இவரையே சாரும். இந்த நூறு இளைஞர்களில் இளையவனான நான் ஒன்றாக ஒரே கட்டடத்தில் குடியிருந்த காரணத்தினால் நாம் எல்லோரும் குதூகலமாக வாழ்ந்த காலத்தில் திரு. கிருஸ்ணராஜா அண்ணனுடன் பழக்கம் ஏற்பட்டது. அந்தக் காலப்பகுதியில் அவரை எல்லா மக்களும் மூனா (முதலாளி) என்றே அழைப்பார்கள். ஆனால் அவர் மூனா (முதலாளி) ஆக யாருடன் நடந்ததைக் காணவில்லை.

என்னுடன் மட்டுமல்ல எல்லோரிடமும் பழகும் போது மரியாதையாகவும் அன்பாகவும் நீர் என்று விழித்தே பேசுவார். என்னிடம் மிகவும் அன்னியோன்யமாக பழகிய காரணத்தினால் அவரோடு நீண்ட காலமாக ஒன்றாக இருக்க வேண்டி ஏற்பட்டது. அதன் காரணமாக அவரோடு இணைந்து பொது சேவைகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அன்றைய கிளிநொச்சி வாழ் எல்லா மக்களிடத்திலும் அன்பாகவும் பண்பாகவும் சேவையாற்றிய காரணத்தினால் அன்றைய கரைச்சி கிராமசபையின் உப தலைவரானார். பின்பு கிளிநொச்சியில் பட்டினசபை உபதலைவராகவும் கடமையாற்றியதோடு வடமாகாணசபையின் கிளிநொச்சி மாவட்ட முதலாவது உறுப்பினராகவும் சேவையாற்றினார்.

அந்தக் காலத்தில் அவரின் நேர்த்தியான சேவைகளைக் காண வாய்ப்புக் கிடைத்தது. அவர் அலுவலக வேலையாக இருந்தாலும் சொந்த வேலையாக இருந்தாலும் கோப்புக்களை ஒழுங்கமைத்து கையாண்ட விதமும் அவரது தோட்டக்காணியில் பயிர் செய்த விதமும் அவரது வயல் காணியில் விவசாயம் செய்த விதமும் என்னை மிகவும் கவர்ந்தது. மிகவும் அழகாக திட்டமிட்டு ஒழுங்கமைத்து நேர்த்தியாக பராமரிப்பார். அரசியலிலும் அன்றைய கௌரவ வீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தசங்கரி பாராளுமன்ற உறுப்பினருடன் சேர்ந்து எந்த வேளையிலும் சலிக்காது தொண்டாற்றிய ஓர் சிறந்த தொண்டனாகவே விளங்கினார். நாட்டுப் பிரச்சினை காரணமாக கிட்டத்தட்ட இருபத்தைந்து முப்பது ஆண்டுகள் அவரது சேவை இல்லாத காரணத்தினால் இன்றைய இளந்தலைமுறையினருக்கு அவரை அறிய வாய்ப்பு கிடைக்கவில்லை.

இருந்தும் அன்னார் இறுதி ஏழு வருட காலமாக கிளிநொச்சி மண்ணுக்கே திரும்பி தனது சொந்தக் காணியில் தற்காலிக வீடமைத்து முன்பு போலவே காணியை மிக நேர்த்தியாக ஒழுங்கமைத்து புதிதாக வீடு கட்டி முதுமையிலும் தன்னால் இயன்ற பொது சேவையினை ஆற்றினார். அன்னாருடன் இறுதி ஏழு வருடமும் இணைந்திருந்தது மிகப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். அன்னார் இறந்தும் இறவாமல் கிளிநொச்சி மக்கள் நினைவு கூரப்படுவார். அவரது வாழ் நாள் சான்றாக கிருஸ்ணபுரம் கிராமம் அவரது பெயரை நினைவு கூரும். அவரது மனைவி பிள்ளைகளிற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

இ.இராசரத்தினம்
ஓய்வுபெற்ற உபதபாலதிபர் (கரடிப்போக்கு)
சமாதான நீதவான்
இல 5/1 திருவையாறு,
கிளிநொச்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் தலைவர்கள்

உலகின் நேர்மையான அரசியல் தலைவர்கள் பலர் இருந்தாலும் அதில் இவருக்குப் பிடித்த சில அரசியல் பிரமுகர்களைப் பார்ப்போம்.


பொன்மனச் செம்மல் M.G. இராமச்சந்திரன்

ஆபிரகாம்லிங்கன்

ஐ.ஜி. பொன்னம்பலம்

டாக்ரர் அப்துல்கலாம் (இறுதிவரை பிரமச்சாரியாக இருந்தவர்)

## ஜி. ஜி. பொன்னம்பலம்



ஜி. ஜி. பொன்னம்பலம் எனப்படும் கணபதி காங்கேசர் பொன்னம்பலம் ( நவம்பர் 8, 1901 - பெப்ரவரி 9, 1977) இலங்கைத் தமிழர்களின் நலன் கருதித் துவக்கப் பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவனர் ஆவார். இலங்கையின் அரசியலில் 1940 களிலும் 1950களிலும் மிகவும் அறியப்பட்டிருந்த இவர் ஒரு திறமையான குற்றவியல் வழக்க றிஞர் ஆவார். ஜீ.ஜீ. என்ற பெயரில் பரவலாக அறியப்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு

பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் என்னும் ஊரில் *1901* ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *8* ஆம் தேதி பிறந்தார். இவரது தந்தையார் கணபதி காங்கேசர். தபால் அதிபராகப் பணியாற்றினார். தாயார் மானிப்பாய்க்கு அண்மையிலுள்ள நவாலியைச் சேர்ந்தவர்.

பொன்னம்பலம், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியிலும், கொழும்பு சென் ஜோசப் கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்னர் உயர் கல்விக்காக இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று இயற்கை அறிவியல் துறையிலும் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றார்.

இலங்கை திரும்பிய அவர் கொழும்பில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். நல்ல வாதத் திறமை கொண்ட பொன்னம்பலம் சிறந்த குற்றவியல் வழக்குரைஞராகப் புகழ் பெற்றார். *1948* ஆம் ஆண்டில் அரச வழக்கறிஞர் (King's Counsel) என்னும் தகுதியைப் பெற்றார். இவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்தனர். இவரது மகன், குமார் என்று அழைக்கப்பட்ட காசிநாதர் காங்கேசர் பொன்னம்பலம், இலங்கைத் தமிழர் அரசியலில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவர். இவர் இனவாதிகளால் சுட்டுக்கொள்ளப்பட்டார்.

## அரசியல் வாழ்க்கை

*1931* ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் முதலாவது அரசாங்கச் சபைக்கான தேர்தலில் மன்னார்-முல்லைத்தீவுத் தொகுதியில் பொன்னம்பலம் போட்டியிட்டாராயினும் வெற்றிபெற முடியவில்லை. ஆயினும் இது இவரின் அரசியல் வாழ்வின் தொடக்கமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1934 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்ட பொன்னம்பலம், வெற்றி பெற்று அரசாங்கச் சபை உறுப்பினர் ஆனார். 1936 ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாகவும் வெற்றி பெற்ற இவர் 1947 ஆம் ஆண்டுவரை அரசாங்க சபை உறுப்பினராகத் தொடர்ந்தார்.

1944, ஆகஸ்ட் 29 இல் இலங்கையில் தமிழர் நலன்களைப் பேணும் நோக்கில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்னும் அரசியல் கட்சியை இவர் தொடக்கினார். இக் காலகட்டத்தில் இலங்கையில் அரசியல் சீர்திருத்தங்களுக்காக பிரித்தானிய அரசினால் ஏற்படுத்தப்பட்ட சோல்பரி ஆணைக்குழு முன் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக சமபல பிரதிநிதித்துவ முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என வாதிட்டார்.

இதன் மூலம் பொதுவாக இலங்கை அரசியலிலும், சிறப்பாக இலங்கைத் தமிழர் அரசியலிலும் பெரும் செல்வாக்குப் பெற்றார். அக்காலத்தில் ஐம்பதுக்கு ஐம்பது என்று பரவலாக அறியப்பட்ட இச் சமபல பிரதிநிதித்துவக் கொள்கையை அடிப்படையில் 1947 இல் இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்துக்காக நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் பெரு வெற்றி பெற்றது. இத் தேர்தலில் நல்ல அரசியல் செல்வாக்குக் கொண்டிருந்த அருணாசலம் மகாதேவாவை எதிர்த்து யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்ட பொன்னம்பலம் பெருமளவு வாக்குகளால் வெற்றி பெற்றார்.

1948 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியால் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதும், மலையகத் தமிழரின் குடியுரிமை பற்றிய பிரச்சினைகளில் பொன்னம்பலத்தின் அணுகு முறைகளையும் ஏற்றுக்கொள்ளாத சில தலைவர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறினர்.

இதனால் கட்சி பிளவு பட்டது. எனினும் பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் தொழில் மற்றும் தொழிற்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். சுமார் ஐந்தாண்டு காலம் அமைச்சராகப் பதவியில் இருந்த இவர், பல பாரிய தொழிற்சாலைகளைத் தமிழர் பகுதிகளில் நிறுவினார்.

வடக்கில், காங்கேசன்துறையில் நிறுவப்பட்ட காங்கேசன்துறை சிமெண்ட் தொழிற்சாலையும், வன்னிப் பகுதிக்கு அண்மையில் பரந்தன் என்னுமிடத்தில் நிறுவப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புக்கு அண்மையில் வாழைச்சேனையில் ஏற்படுத்தப்பட்ட காகித ஆலை ஆகியவை இவற்றுள் முக்கியமானவை.

## புரட்சித்தலைவர் M.G. இராமச்சந்திரன்



புரட்சித் தலைவர் M.G இராசமச்சந்திரன் MGR அவர்கள் இலங்கையில் பிறந்து பின்பு தந்தையாரின் மறைவால் தனது இரண்டாவது வயதில் தாயாருடன் தமிழ் நாட்டிலுள்ள கும்பகோணத்தில் குடியேறினார்.

சிறுவயதில் மிகுந்த ஏழ்மை காரணமாக கல்வி கற்க வேண்டிய வயதில் நாடகக் கம்பனியில் சேர்ந்து அங்கு தனது திறமைகளை நடிப்பாற்றலை நிரூபித்து பின்பு சினிமாத்துறையில் புகுந்தார். அங்கு தனது உயர்ந்த கொள்கைப்பிடிப்புள்ள புரட்சிகரமான நடிப்பால் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களைக் கவர்ந்தார். சினிமாத்துறையில் இருந்த போதே அரசியலிலும் ஈடுபட்டு தனது செல்வாக்கை வளர்த்துக் கொண்டார். தான் சேர்ந்த கட்சியின் வெற்றிக்கு காரணமாக அமைந்து திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டில் ஆட்சிபீடம் ஏற வழிவகுத்தார்.

பின்பு கட்சியில் அவருக்கு எதிராக சதிவேலைகள் நடைபெற்று கட்சியில் இருந்து நீக்கப்பட்டமையினால் புதிய கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று தமிழ் நாட்டின் முதலமைச்சரானார். தொடர்ந்து மூன்று முறை தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த பெருமை MGR அவர்களைச் சேரும். இறக்கும் போதும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவே இருந்தார். இலங்கைத் தமிழர்கள் மீது அளவற்ற அன்பும் மரியாதையுமுடையவர். அதன் நிமித்தம் இலங்கைத் தமிழர்களுக்கு பல உதவிகளைப் புரிந்தார்.

தமிழர்கள் துன்பத்திலிருந்து விடுபட எவ்வளவு பணம் தேவை என கேட்டு அதனைக் கொடுத்த உத்தமர்.


ஏழைகளின் மீதும் பலவீனமானவர்களின் மீதும் அன்பும் கருணையும் நிறைந்த பொன்மனச் செம்மல். தமிழ் நாட்டின் கொடை வள்ளல் கர்ணன் ஆக திகழ்ந்தார். தனது சொத்துக்கள் அனைத்தையும் மக்களுக்காக எழுதி வைத்தார்.

நடிப்பிலும் நிஜவாழ்க்கையிலும் ஒரே மனநிலையில் திகழ்ந்தார். அவரது வாழ்க்கையின் பயணத்தை மக்களுக்கானது என்பதை நிரூபிக்கும் முகமாக அவரது இறுதிப்பணத்தில் வரலாறு காணாதளவிற்கு பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கை வரலாறு



ஆபிரகாம் லிங்கன் சுய முன்னேற்றத்துக்கான அடிப்படைப் பண்புகளும், வெற்றிக்கான தகுதிகளும் ஒரு சேரப் பெற்றவர். அவர் நற்பண்புகளைத் தேடிப் பெற்றவர், தகுதிகளை வளர்த்துக் கொண்டவர்.

மரம் வெட்டுவதில் இருந்து நாட்டை ஆள்கிறது வரை அத்தனைக்கும் பொருத்த மான ஆளாய் இருந்தார் அவர். அமெரிக்கக் குடியர சின் பதினாறாவது அதிப ரான லிங்கன் சுயமாய்ப் படித்து முன்னுக்கு வந்தவர்.

## ஆபிரகாம் லிங்கன் பிறப்பு

மிகவும் எளிமையான குடும்பத்தில் 1809-ஆம் ஆண்டு அவர் பிறந்தார். விறகுக் கட்டை அல்லது மிருகக் கொழுப்பை எரியவிட்டு அந்த வெளிச்சத்தில் படிப்பார். புத்தகங்களை இரவலாய் பெற்றுவர வெகு தொலைவு நடந்து சென்றிருக்கிறார்.

படிப்பதில் அத்தனை ஆர்வம், சொந்த மாய் புத்தகம் வாங்க முடியாத அளவுக்கு வறுமை! அப்படிப் படித்துதான் அவர் வழக்கறிஞரானார். தான் காதலித்த பெண்ணை மணக்க முடியாத ஓர் அதிஷ்ரக்கட்டை அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கன் பேச்சாற்றல் மிக்கவர். செனட் தேர்தலின் போது கெட்டிஸ்பர்க் என்ற இடத்தில் அவர் ஆற்றிய உரை வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. அவருடைய எளிமை குறிப்பிடத்தக்கது.

தாம் மண் தரையில் வசித்த நாட்களை கடைசிவரை அவர் மறந்துவிடவில்லை. வெள்ளை மாளிகையில் இருந்தபோதும் தம்முடைய ஷூக்களுக்குத் தாமேதான் பாலீஷ் போட்டுக் கொள்வார்.

அவருடைய தளபதி ஸ்டாண்டன் கூறுவான், "அழக்கூடாதே என்பதற்காக அவர் சிரித்தார்" என்று. லிங்கன் மரணமடைந்த தறுவாயில் அவருடைய மகன் 'டெட்' சொன்னான், "என் தந்தை கட்டாயம் சொர்க்கத் துக்குத்தான் செல்வார்.நரகத்தை அவர் இங்கேயே அனுபவித்தாயிற்று" என்று.

லிங்கன் ஒரு சமயம் மதபோதகர் ஒருவருடைய பிரார்த்தனைக் கூட்டத்துக்குச்சென்றிருந்தார். மதகுரு கூட்டத்தினரை நோக்கி உங்களில் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர் கையைத் தூக்குங்கள் என்றார். லிங்கனைத் தவிர எல்லாரும் கையை உயர்த்தினர்.

எங்கே போவதாய் உத்தேசம்' என்று லிங்கனிடம் 'நீங்கள் சொர்க்கத்துக்குப் போக விரும்பாவிட்டால் வேறு" போதகர் கேட்டார். நான் 'செனட் (சட்டமன்ற மேலவை) மத லிங்கன்.

அப்படியோர் உயர்ந்த குறிக்கோளை ஏற்டிற்குச் செல்ல விரும்புகிறேன்' என்று பதிலளித்தார் அவருக்குத் தம்முடைய குறிக்கோளைத் தவிர வேறெதுவும் தேவைப் பட்டிருக்கவில்லை.

## ஆபிரகாம் லிங்கன் குடியரசு தலைவர்

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கக் குடியரசுத் தலைவராய் பதவி வகித்தபோது தென் அமெரிக்காவில் நிறவெறிக் கொடுமை தலை விரித்தாடியது. மனிதனை மனிதன் அடிமையாக்கும் அவலம் கண்டு மனம் கொதித்தார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட அமெரிக்க மக்களின் ஆதரவோடு தென் அமெரிக்காவுடன் உள்நாட்டு யுத்தம் நடத்தி 35,00,000 அடிமை களை அவர் விடுவித்தார். நீக்ரோக்களின் விடுதலைக்குப் பாடுபட்ட முதல் அமெரிக்கர் அவர்.

தம்முடைய சாதனைகளைப் பற்றி அவர் தம்பட்டம் அடித்துக் கொண்டதில்லை. 'முட்புதர்கள் இருந்த இடத்தில் முட்களை அகற்றி ரோஜாவை மலர வைத்தார்.

இவன் என்று வரலாறு இரண்டு வரிகள் என்னைப் பற்றி எழுதினால் போதும் என்று அவர் கூறுவார். 'என்னுடைய பேனா முனை ஒரு நிரபராதியை தூக்குத் தண்டனையில் இருந்து விடுவிக்க முடியும் என்கிறபோது அனாவசியமாக அவனைச் சாகடிக்க மாட்டேன்' என்று தன்னுடைய நாட்குறிப்பில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

1865-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள் தம்முடைய மனைவியோடு நடன நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காய் சென்றிருந்தார் லிங்கன். கணவர் போரில் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதற்காக மேரி ஏற்பாடு செய்திருந்த கொண்டாட்டத்தில் ஒரு பகுதிதான் நடனம்.

அப்போ ஜான் வில்க்ஸ் பூத் என்கிற நிறவெறியன் லிங்கனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். இன்று லிங்கன் மெமோரியல் கட்டடத்தில் சிலை யாய் அமர்ந்திருக்கும் லிங்கன் இலட்சோபலட்சம் அமெரிக்க இளைஞர்களால் மரியாதையுடன் வணங்கப்படுகிறார்.


எளிமை, கம்பீரம், விடாமுயற்சி உள்ள அந்தப் பெருந்தலைவரின் வாழ்க்கையை முன்னேறத் துடிக்கும் இளைஞர்கள் முன்மாதிரியாய் கொண்டதில் வியப்பில்லை. லிங்கன் அத்தனை வெற்றிக்கும், புகழுக்கும் முற்றிலும் பொருத்தமானவராகவே இருந்திருக்கிறார்.

பல தோல்விகளுக்குப் பிறகு மிகப்பெரிய வெற்றியைக் கண்டவர் அவர். அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் போது அது எத்தனை உண்மை என்பதை நீங்களே உணர்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம்



இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப்பெரிய பொருளாளர், இந்தியாவின் 11 வது குடியரசு தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கதக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன்மாதிரியாக கருதப்படும். பலர் பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

## கல்லூரி வாழ்க்கை

தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்தபிறகு, இயற்பியல் பயின்றார். ஆனால், இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர், 1955 ஆம் ஆண்டு தன்னுடைய "விண்வெளி பொறியியல் படிப்பை" சென்னையிலுள்ள எம்.ஐ.டி-யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

1960 ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய அப்துல் கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்திய ராணுவத் திற்காக வடிவமைத்து கொடுத் தார். பின்னர், இந்திய விண் வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார்.

1980 ஆம் ஆண்டு SLV -III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி-I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச்செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே பெருமை சேர்த்தது.

## குடியரசுத் தலைவராக ஏ.பி.ஜே அப்துல் கலாம்

2002 ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11 வது குடியரசு தலைவராக ஜூலை 25 ஆம் நாள் 2002 ல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான "பாரத ரத்னா விருது" மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது.

மேலும், "பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையைப் பெற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

2007 ஆம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம், பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிட போவதில்லை என முடிவு செய்து விலகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம்

அப்துல் கலாம் அவர்கள் ஜூலை 27, 2015 ஷில்லாங்கில் உள்ள இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்டில் மேடையில் பேசிக்கொண்டிருந்தபோதே மயங்கி விழுந்து மரித்தார்.

## அப்துல் கலாமின் பொன் மொழிகள் சில

*"நம்பிக்கை நிறைந்த ஒருவர்...*
*யார் முன்னேயும் எப்போதும்*
*மண்டியிடுவது இல்லை..."*

*"கனவு காணுங்கள்*
*ஆனால் கனவு என்பது*
*நீ தூக்கத்தில் காண்பது*
*அல்ல உன்னை*
*தூங்க விடாமல்*
*பண்ணுவது எதுவோ*
*அதுவே (இலட்சியம்) கனவு.."*

*"உலகம் உன்னை அறிவதைவிட,*
*உன்னை உலகிற்கு அறிமுகம் செய்துகொள்!"*

*"கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே*
*அது உன்னை கொன்றுவிடும்.*
*கண்ணை திறந்து பார் அதை வென்று விடலாம்."*

*"தோல்விகளை எதிர்கொள்ள கற்றுக் கொள்ளுங்கள். அதுதான் வெற்றிக்கான மிக முக்கியமான திறமை."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் கூறும் அரசியல் அறநெறி

அறந்திறம்பா நெறியால் பொருளீட்டு மாறும், தன்னைப் போற்றித் தானுந் துய்த்துப் பிறர்க்கும் கொடுக்குமாறும் என்று பொருட்பாலுக்குரிய விளக்கம் கூறும் வள்ளுவர் அரசநீதியையும் கூறியுள்ளார். ஏனெனில் நாட்டில் உள்ள மெலியார் பொருட்களை வலியார் கவராமல் நாடுவளம் பெற்று, வாணிகம் பெருகிட, நல்லார்க்குத் தீது புரியுங் கொடியாரைக் கண்டித்து முறை செய்யும் மன்னன் இல்லையாயின் பொருளீட்டுதல் நிகழாதாகையால் இங்கு அரசநீதியைக் கூறியுள்ளார்.

## பகுப்பு முறை

அரசியலில் அங்கவியல், குடியியல் என்பன அடங்குகின்றன. அரசன் செங்கோல் நடத்தும் முறையும் அவனுக்குத் துணைக்காரணமாகிய அங்கங்களின் இயல்பும், அவ்வரசனால் பாதுகாக்கப்படும் குடிமக்கட்குரிய ஒழுகலாறும் சொல்லல் என்ற அடிப்படையில் பகுக்கப்பட்டதால் இறுதி இயல் குடியியல் எனப்பட்டது. அப்பெயரை ஒழிபியல் என மாற்றியோர் பரிமேலழகரோ, அவர்க்கு முற்பட்ட உரையாசிரியரோ என்பது தெளியப்படவில்லை

## குறிக்கோள்

"திருவள்ளுவர் குறள் முப்பாலால் ஆகியது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. "உலகம் ஒரு குலம்" என்பதற்குக் கால்கொள்ளும் இடம் காமத்துப்பால், அப்பாலுக்கு உரம் அளிப்பது பொருட்பால் இரண்டையும் ஒழுங்கில் இயக்கிக்காப்பது அறத்துப்பால். மூன்றன் குறிக்கோளும் "உலகம் ஒருகுலமாதல் வேண்டும்" என்பதைத் திரு. வி. கலியாணசுந்தரனார் விளக்குகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்

அரசியல், அங்கவியல், ஒழிபியல் இம்மூன்றியலுள்ளுங் கூறும் பொது நெறிக்கருத்துகளை இங்குக் கூறுவதென்பது இயலாத செயல் ஆகையால், அரசியல் 25 அதிகாரத்தினுள் கூறப்பட்டுள்ள 250 குறட்பாக்களின் பொது நெறிக் கருத்துக்களைக் காண்போம் அவற்றுள் 61 குறள்கள் மட்டுமே அரசுக்கு (அ) அரசனுக்குக் கூறப்பட்டுள்ளன. 189 குறள்கள் ஆட்சித் தலைமை உட்பட "எல்லாருக்கும் பொருந்தும் பொதுக் கொள்கைகளைப் பேசுகின்றன.

## பொது நெறிக் கருத்துகள்

பண்டைத் தமிழகத்தில் "அறங்கூறும் அவையங்கள் பல இருந்துள்ளன. அதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன அறம் என்பது மனித வாழ்வில் தீமைகளை அகற்றித் துன்பங்களை விலக்கி இன்பத்தைத் தருவது இந்த அறநெறி மனித வாழ்வில் படிப்பினைகளிலிருந்தே தோன்றி வரலாற்றுக்கு வளமூட்டுகிறது. இந்த அறநெறிகளில் மனிதகுலம் ஒன்றி நின்று வாழ்வதை உறுதிப்படுத்தத்தான் அரசியல் தோன்றுகிறது. தொண்டு செய்கிறது.

அரசியல் தத்துவங்கள் மனித வரலாற்றின் நிகழ்வுகளிலிருந்து தோற்றம் பெறுகின்றன. வள்ளுவர் காட்டும் அரசு குடியாட்சி தழுவிய முடியாட்சியாகும்.

## அரசர்க்குரிய தகுதிப்பேறுகள்

வடமொழிச் சாத்திரங்கள் கூறுவதைப்போல் ஆட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கும் வேந்தன் பிறப்பாலோ வழிவழியாகவோ மரபு வழியிலோ அன்றிக் கடவுள்தன்மை பெற்றோ ஆட்சிக்குவர வேண்டும் என்ற எவ்வகை நியதியையும் வள்ளுவர் கூறவில்லை. ஆனால், மக்கள் ஆட்சியை மாண்புற நடத்துவதற்கான தகுதிகளையும், பண்புச் சிறப்புகளையும் ஆட்சித்தலைவருக்குரிய இலக்கணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

குறள் 381)

ஆகிய 6 உடைமைகளையும் பெற்று அரசையும், குடிமக்களையும் நடுமாய்க் கொண்டதாகும்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப் படும்

(குறள் 388)

எனவும்

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு

குறள் 385)

பொருள் வருவாய்களை மேன்மேலும் உண்டாக்குதலும், வந்த பொருள்களை ஓரிடத்துச் சேர்த்தலும் சேர்த்தவற்றைப் பிறர்கவராமல் காத்தலும், காத்தவற்றை அறம் பொருள் இன்ப வழிகளில் செலவிடப் பகுத்தலும் வல்லவனே சிறந்த அரசன் என்றும் (186 387, 390) அறத்தின் வழிநின்று அரசர்க்குரிய தகுதிப்பேற்றுடன் வாழவேண்டும் என்றும் கூறுகின்றார்

## தலைமை முறைகாத்தல்

அரசனுக்குரிய குற்றங்களையும் (432) அக்குற்றத்தைக் கண்டு அவற்றை நீக்கிவிட்டுப்பின்பு பிறர் குற்றத்தைக் காண வல்லவனாயின், அரசனுக்கு வரக்கூடிய குற்றம் ஒன்றுமில்லை (436) என்றும்

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்

குறள் 547)

என்றும் வையகம் முழுவதையும் அரசன் காப்பான். முட்டுப்பாடு நேர்ந்தபோதும் முட்டில்லாது முறை செய்வானானால் அரசனை அச்செங்கோல் காக்கும் என்றும் கூறுகிறார். செங்கோன்மை (544,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

546, 547, 549, 550, 551, 555), மன்னர்க்குச் சிற்றினம் சேராமை (452), குடி தழுவிய கோல் அடிதழுவி நிற்கும் குடி (542, 544), அருளற்ற ஆட்சி (557, 570,558,552), மழை விளைவு (545), மழை தவறும் நிலை (559) ஆட்சித் தலைமை கெடல் (548 563 564,567 569, 448) ஆகிய கருத்துகளும் கூறப்பட்டுள்ளன

திருவள்ளுவர் சங்ககால மக்களிடம் பரவியிருந்த புராணக் கதையை எடுத்துக்காட்டிச் சோம்பலின்மையின் திறத்தை,

மடியில்லா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு
(குறள் 610)

என்ற குறளில் ஓர் அரசன் சோம்பலில்லாத தன் முயற்சியால் திருமால் கடந்த (தாவிய) மாநிலம் முழுவதையும் அடைவான் என்கிறார். மேலும் தன்வலியும், துணை வலியும் அறிதல் பற்றிய கருத்துகளை 471-476 வரையிலான குறள்கள் புலப்படுத்துகின்றன.

**ஊக்கமுடைமை**

கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற மிகச்சிறந்த அழகு பண்புடையவரிடம் இருப்பதனாலேயே இவ்வுலகம் அழியாமல் இருந்து வருகிறது (571,592,593,594,595,600,605,607) ஊக்கம் உடைமையே நிலையான உடைமை. ஏனென்றால் அது மனத்தில் உள்ள செல்வமாகும். பொருள் உடைமை நிலைத்தது அன்று. அது உடம்பைவிட்டு வேறாக இருப்பது. ஆகையால் அழியக்கூடியது. நிலைத்த செல்வமான ஊக்கத்தைத் தம்மிடம் கொண்டவர்கள் பெற்ற நன்மை போய்விட்டதே என்று எப்போதும் வருந்த மாட்டார்கள். ஊக்கம் கொண்டு உழைத்து மீண்டும் அதை அடையப் பாடுபடுவார்கள். சோர்வற்ற ஊக்கம் உடையவனிடத்தில் நன்மை தானே கீ வழிகேட்டுப் போய்ச் சேரும். (611 612, 613. 615)

முயற்சி திருவினை ஆக்கும் முயற்று இன்மை
இன்மை புகுத்தி விடும்
(குறள் 610)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி பொருள் வளத்தைப் பெருக்கும். முயற்சி இல்லாவிட்டால், வளம் எல்லாம் வறண்டு வறுமை அடையச் செய்யும். **(616,619, 620)** என்கிறார் வள்ளுவர்

## பெரியாரைத் துணைக்கோடல்

அறத்தின் பெருமையை உணர்ந்தவர்களாகவும் தன்னை விட அனுபவம் முதிர்ந்தவர்களாகவும் உள்ள பெரியவர்களின் துணை வேண்டும். அவர்களுடைய துணையை முறை அறிந்து கொள்ள வேண்டும். வந்த துன்பத்தை நீக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. இனித்துன்பம் வராமல் காக்கும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு ஆகையால் அவர்களுடைய துணையைப் போற்ற வேண்டும்

அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்

(குறள் 441)

அத்தகைய பெரியவர்களின் துணை இருந்தால் அந்தத் தலைவனைக் கெடுக்கவல்ல பகைவர் ஒருவரும் இல்லை. அவ்வாறு இடித்துக் கூறித்திருத்தும் பெரியவர்களின் துணை இல்லாத தலைவன் கெடுவான். அவனுக்குத் தீமை செய்யப் பகைவர் இல்லாவிட்டாலும் அவன் எளிதில் கெடுவான். **(447 448)**

## தெரிந்து செயல்வகை

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு

(குறள் 467)

செய்யத்தகுத்த செயலையும் வெற்றியாக முடிக்கும் வழிவகைகளையும் ஆராய்ந்து தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணுவோம் என்பது குற்றமாகும். எனவே தகுந்த வழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படாத முயற்சி, பின்பு பலரும் துணையாக நின்று காப்பினும் கெட்டுப் போகும். *(468)*

## இடுக்கண் அழியாமை

துன்பம் வரும்போது சோர்ந்து அழியாமல் உள்ளத்தில் மகிழ வேண்டும். வந்த துன்பத்தை வெல்வதற்கு அதைப்போல் சிறந்த வழி இல்லை.

இடுக்கண் வருங்கால நகுக அதனை
அடுத்து ஊர்வது அதுஒப்பது இல்

*(குறள் 621)*

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்

*(குறள் 622)*

இன்பம் வந்தபோது கடமையைச் செய்வதொடு நின்று இன்பத்தை விரும்பாமல் வாழ்ந்தால் துன்பம் வந்தபோது கடமையைச் செய்து கொண்டு துன்புறாமல் இருக்க முடியும். *(622, 629)*

## பிறிதுமொழிதல்

திருவள்ளுவர் வேறு எப்பகுதியிலும் இல்லாத அளவிற்கு இப்பகுதியில் பிறிது மொழிதலாய்க் கருத்துகளை அமைத்துள்ளார். அந்த அமைப்பை எண்ண எண்ணத் திருவள்ளுவரின் அற நெஞ்சம் புலனாகின்றது. வலியறிதலில் இருமுறையும் *(475, 476)* இடனறிதலில் மும்முறையும் *(495, 496)* கூறுகின்றார்.

கால் ஆழ் களரின் நரி அடும் கண் அஞ்சா
வேல் ஆள் முகத்த களிறு

*(குறள் 500)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகரின் சினந்த பார்வைக்கும் அஞ்சாமல், போர்க்களத்தில் வேல் வீரரைக் கோட்டால் குத்திக் கோத்த மத யானைகளையும், அவை கால் புதையும் சேற்று நிலத்தில் சிக்கிய போது மிகச் சிறிய நரிகளும் கொன்று விடும் என்ற பிறிதுமொழிதல் அமைத்துள்ளார்.

அவை அல்லாமல் உவமைகளும், உருவகங்களும் பல உள்ளன. இவற்றை ஆராய்ந்தால் போர் அறநெறியிழந்து கெட்டு வருதலையும், பொது நன்மைக்குப் பயன்படாமல் பொது அழிவுக்குப் பயன்பட்டுவருதலையும் திருவள்ளுவரே உணர்ந்து உணர்ந்து போரை வெளிப்படையாய்க் கூறாமல் விட்டார் என்று எண்ணத் தோன்றுகிறது.

எதிர்காலத்தில் அறிஞர்களாலும், பொதுமக்களாலும் போர் வெறுக்கப்படும் என்று உணர்ந்து போரற்ற காலத்திற்கும் பயன்படுமாறு எழுதினார் என்று கருத இடந்தருகின்றது.

உலகம் முன்னேற ஒழுக்கம் வேண்டும். அவ்வொழுக்கத்தை தானும் மன்னன் செங்கோலால் எய்தப் பெறுவதாகும். மன்னன் கோல் கோடின் மக்களின் ஒழுக்கங் குன்றும். குன்றின் அரசனுமில்லை, குடிகளுமில்லை.

மன்னரும், அமைச்சரும், பிற உறுப்பினரும் தத்தம் பொறுப்புகளையும், கடமைகளையும் உணரப் பொருட்பாலிற் பல அதிகாரங்களை வள்ளுவப் பெருந்தகை வகுத்துள்ளார். திருக்குறள், ஒழுக்கம் கூற வந்த அறநூல் என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதர்மாக் கோட்பாடும் அரசியற் சமூகச் செயற்பாடும்

இந்து மதத்தில் ஒரு சமூகச் செயற்பாடு உண்டு. அதை சுதர்மா என்று அழைப்பார்கள். அக் கோட்பாட்டின்படி ஒருவர் தன் தொழிலையே வழிபாடாக செய்யலாம். தன் தொழிலையே ஒரு தவமாக செய்யலாம். ஒரு தியானமாகச் செய்யலாம். ஒரு தொண்டாகச் செய்யலாம்.

ஒவ்வொருவரும் அவரவருக்குரிய தொழில் சார் கடமைகளை ஆகக்கூடிய பட்சம் அர்ப்பணிப்போடு செய்ய வேண்டும். அதைத் தொழிலாகவேனும் செய்யலாம். அதேசமயம் குறிப்பிடத்தக்க அளவு விகிதம் அதைத் தொண்டாகவும் செய்ய வேண்டும்.

அவ்வாறு ஒருவர் தனக்குரிய தொழில்சார் சமூகக் கடமையை தொண்டாக செய்தால் அதுதான் அவருடைய தியானம். அதுதான் அவருக்கு தவம் அதுதான் அவருடைய வழிபாடு. அதுதான் சுதர்மாக் கோட்பாடு.

எந்த ஒரு சமூக செயற்பாட்டை செய்யும் பொழுது உனக்கு தெரியாமலே சக்தி பெருகி வருகிறதோ அது தான் உனக்குரிய சுதர்மா. எது ஒன்றை செய்யும் பொழுது புதிது புதிதாக உனக்குள் படைப்புச் சக்தி வற்றாமல் ஊற்றெடுக்கிறதோ அதுதான் உனக்குரிய சுதர்மா. எது ஒன்றைச் செய்யும் பொழுது ஊணின்றி உறக்கமின்றி செய்யக் கூடியதாக இருக்கிறதோ, எது ஒன்றைச் செய்யும் பொழுது உனக்கு களைப்பு வருவதில்லையோ, அதுதான் உனக்குரிய சுதர்மா.

எது ஒன்றை செய்யும் பொழுது உன்னைத்தேடி புதிது புதிதாக நல்ல நண்பர்கள் வருகிறார்களோ அதுதான் உனக்குரிய சுதர்மா. எது ஒன்றை செய்யும் பொழுது உன்னோடு உள்ள கெட்டவர்கள் விலகி ஓடுகிறார்களோ அதுதான் உனக்குரிய சுதர்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி ஆசிரியராக இருக்கும் ஒருவர் அதை தொழிலாகச் செய்யும் அதேசமயம் அதை ஒரு தொழிலாகவும் தொண்டாகவும் செய்யும் போது இரண்டுக்குமிடையே ஒரு சமநிலை பேணப்பட வேண்டும்.

அதை தொண்டாகச் செய்யும் போது அதில் இயன்ற அளவுக்கு அர்ப்பணிப்போடும், விசுவாசத்தோடும், தியாக சிந்தையோடும் அவர் இருக்கவேண்டும். அவ்வாறு முன்னுதா ரணமாக திகழும் ஓர் ஆசிரியர் மாணவர்களுக்கு தாயாகவும் தகப்பனாகவும் இருப்பார். அவர் சொல்வதை பிள்ளைகள் கேட்கும். பிள்ளைகளை பொறுத்தவரை அவர் ஒரு முன்னுதாரணம் மட்டுமல்ல வழிகாட்டி மட்டுமல்ல அவர் ஒரு தலைவரும் ஆவார்.

இவ்வாறு ஒரு மருத்துவரை எடுத்துக்கொண்டால், அவர் அதைத் தொழிலாகச் செய்யட்டும். ஆனால் வாரத்தில் ஒரு நாளையாவது அதைத் தொண்டாகச் செய்வதற்கு ஒதுக்க வேண்டும். மருத்துவ உதவிகள் கிடைக்காத கிராமங்களுக்குச் சென்று அதை அவர் செய்யலாம். பெரிய செலவில் மருத்துவ ஆலோசனைகளை பெறுவதற்கு முடியாதிருக்கும் ஏழைகளை நோக்கி அவர் போகலாம். அவர் மருத்துவத்தை ஒரு தொண்டாக செய்யும் போது அந்த இடத்தில் நோயாளர்கள் மத்தியில் அவர் ஒரு முன்னுதாரணமாக மாறுவார். ஒரு தலைவராக மாறுவார். அவர் எந்த அரசியலை பின்பற்றுகிறாரோ அந்த அரசியலை அவரை மதித்துப் போற்றும் மக்களும் பின்பற்றுவார்கள்..

ஒரு வழக்கறிஞரை எடுத்துக்கொள்வோம். அவர் அதைத் தொழிலாக செய்யட்டும். அதேசமயம் தொண்டாகவும் செய்ய வேண்டும். தமிழ்மக்கள் மத்தியில் நிறைய வழக்கறிஞர்கள் உண்டு. அவர்களில் அநேகமானவர்கள் நிறைய உழைக்கிறார்கள். ஆனால் அதன் மூலம் அவர்கள் பெற்ற பணத்தையும், பிரபல்யத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அரசியலில் முதலீடு செய்ய முயல்கிறார்கள். மாறாக தமது தொழிலை ஒரு தொண்டாகச் செய்யும் ஒரு வழக்கறிஞரை அவரால் பயனடையும் மக்கள் போற்றுவார்கள். அவர்களைப் பொறுத்தவரை அந்த வழக்கறிஞர் ஒரு முன்னுதாரணம். அவர் பின்பற்றும் அரசியலை அந்த மக்களும் பின்பற்றக்கூடும்.

எனவே ஒவ்வொரும் தனக்குரிய தொழில்சார் சமூகக் கடமையை ஒரு தொண்டாக செய்யும் பொழுது அவருக்கான அந்த சமூகதளத்தில் அவர் ஒரு முன்னுதாரணமாக மாறுவார். ஒரு விழுமிய உருவாக்கியாக மாறுவார். ஒரு தலைவராக மாறுவார்.

இப்படித்தான் உள்ளூர்த் தலைவர்களை உருவாக்க வேண்டும். இவ்வாறு கிராம மட்டத்தில் உருவாக்கப்படும் தலைவர்கள் பின்னர் நகரத்துக்கும் மாவட்டத்துக்கும் மாகாணத்திற்கும் முடிவில் தேசிய மட்டத்திற்கும் அப்பால் சர்வதேச மட்டத்திற்கும் மேலெழுந்துவிடுவார்கள்.

எனவே தமிழ் மக்களுக்கு தொண்டு செய்யும் தலைவர்கள் வேண்டும். தொழிலை ஒரு சமூகச் செயற்பாடாகச் செய்யும் முன்னுதாரணமானவர்கள் வேண்டும். அவ்வாறு தன் தொழில்சார் தளத்தில் செயற்பாட்டாளராகவும், தொண்டராகவும் இருப்பவரே மெய்யான தலைவர். மக்களுக்கு இப்பொழுது தேவை உபதேசங்களோ போதனைகளோ அல்ல. முன்னுதாரணங்களே.



நன்றி

நிலாந்தன்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைஞானம்

இல்லறத்தான் இறை பக்தி கொண்டவனாக இருக்க வேண்டும். அதே வேளையில் அவன் இடையீடு இல்லாமல் செயல் புரிய வேண்டும். தன் கடமைகள் அனைத்தையும் செய்ய வேண்டும், செயல்கள் அனைத்தின் பலனையும் அவன் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

வேலை செய்து விட்டு அதன் பலனைப் பொருட்படுத்தாது இருப்பது, ஒருவனுக்கு உதவி செய்தபின் இவன் நன்றியுடன் இருக்க வேண்டும் என்று எண்ணாமல் இருப்பது ஒரு வேலையைச் செய்து விட்டு அதனால் பெயரோ புகழோ வருமா, எதுவும் கிடைக்காமல் போகுமா? என்பது பற்றி சிறிதும் சிந்திக்காமல் இருப்பது இவையெல்லாம் மிகவும் கடினமான காரியங்கள்.

உலகமே புகழும் என்றால் வடிகட்டிய கோளைகள் கூட வீரனாக மாறி விடுவான். சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமானால் அது தன் மீது புகழ்க் கொடியை ஏற்றுகிறது என்றால் கடைந்தெடுத்த முட்டாள் கூட வீரதீர செயல்களைச் செய்து விடுவான்.

ஆனால் பிறர் ஆமோதிப்பதை எதிர்பார்க்காமல் தொடர்ந்து நன்மை செய்வது என்பது தான் உண்மையிலேயே ஒருவன் செய்ய முடிந்த தியாகங்களில் தலை சிறந்தது.



- சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதாகைகள் பிரசுரித்தோர் விபரம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி கிராமசபை, பட்டணசபை ஆகியவற்றின்
தலைவரும், மாவட்ட அபிவிருத்தி சபையின் உறுப்பினருமான

அமரர்
இளையதம்பி
கிருஸ்ணராஜா

பிறப்பு : 1939.08.28
இறப்பு : 2022.03.21

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

அஞ்சலிப்போர் : தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், பணியாளர்கள்
கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி



கண்ணீர் அஞ்சலி


அமரர். இளையதம்பி கிருஷ்ணராசா

தோற்றம்:- 28.08.1939 மறைவு:- 21.03.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Covid -19

## கொரோனா வைரஸ் பற்றிய ஓர் கண்ணோட்டம்

உலக சுகாதார அமைப்பு (WHO) Covid -19 ஐ ஒரு பெருந் தொற்று நோயாக அறிவித்துள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு சீனாவின் வூஹான் மாநிலத்தில் அறியப்படாத ஓர் வைரஸ் தொற்றாகத் தோற்றம் பெற்ற இந்நோய் வைரஸைப் புரிந்து கொள்வதற்கும் சமாளிப்பதற்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு சந்தர்ப்பமளிக்காது சொற்பகாலத்திலேயே பரவும் வேகம் அதிகரித்து இன்று பல லட்சம் உயிர்களைக் காவுகொண்டு உலகை நிலைகுலையச் செய்துவிட்டது. உலகளாவிய ரீதியில் பாரிய அழிவினை ஏற்படுத்திய ஓர் கொடிய தொற்று நோயாகக் காணப்படுகின்றது.

### Covid -19 இன் அறிகுறிகள்

வைரஸ் முதன்முதலாக தாக்கிய காலகட்டத்தில் இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்படும். பின் வாசனை இழத்தல், சுவை உணர்வை இழத்தல் போன்ற அறிகுறிகளுடன், தொண்டைவலி, தலைவலி, உடல்வலி, வயிற்றுப்போக்கு, கண்கள் சிவத்தல், கண்கள் எரிதல், தோலில் வெடிப்புக்கள் ஏற்படல் போன்ற அறிகுறிகளும் தென்படும்.

இந்நோய்த் தொற்று தீவிரமடையும் போது

- சுவாசிப்பதில் சிரமம்
- பேச்சு அல்லது இயக்கம் இழப்பு,
- நெஞ்சுவலி போன்ற அறிகுறிகள் தென்படும்.

### நோய்த்தாக்கம்

இந் நோய்த்தாக்கமானது ஏற்கனவே தொற்றா நோய்களால் (நீரிழிவு, இதயநோய்கள், சிறுநீரக நோய்கள்) பாதிக்கபட்டவர்களிடையே பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் சில சமயங்களில் மரணத்தையும் ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான நோயாளிகள் விரைவில் குணமடைந்தாலும் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தளவிலுள்ளவர்கள் (கர்ப்பிணித்தாய்மார், பிறந்த குழந்தைகள், முதியவர்கள், நோய்வாய்ப்பட்டோர்) ஆகியோர்க்கு இத்தொற்று இதயம் மற்றும் நுரையீரலில் அதிக பாதிப்பை ஏற்படுத்துவது ஆய்வுகளினூடு கண்டறியப்பட்டுள்ளது.

## Covid -19 இன் பரவல்

மக்கள் தும்மும்போது அல்லது இருமும்போது வெளிவரும் சளித்துணிக்கைகள் அல்லது திரவத்துளிகளினூடாக வெகுவிரைவில் ஏனையோருக்கும் பரவலடைகின்றது. இவ்வாறு சளித் துணிக்கைகள் மேற்பரப்புகளில் காணப்படும்போது தொடுகை மூலமும் அவை பரம்பலடைகின்றன.

## Covid -19 இன் புதிய திரிபுகள்

தற்காலத்தில் Civid -19 இன் பிரிவுகள் பல வகையாகப் பரவி சமூகத்தில் அதிக தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. வைரஸ் தனது நகல்களை உருவாக்குகின்றது. அதாவது உருமாற்றம் அடைந்து அதிக ஆபத்தான வைரஸ் ஆகவும், அதிகம் பரவக்கூடிய வைரஸ் ஆகவும் உருப்பெற்று அழிவை ஏற்படுத்துவதுடன் இவற்றின் பிறழ்வு காரணமாக உயிர் அணுக்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் 30% த்துக்கும் அதிகமாக மரணஅபாயம் ஏற்படும் சாத்தியமும் உள்ளது ஆராய்ச்சிகளூடாக அறியப்பட்டுள்ளது.

உங்களையும் மற்றவர்களையும் **Civid -19** தொற்றிலிருந்து பாதுகாக்கச் சில வழிகள்

- குறைந்தது ஒரு மீற்றர் சமூக இடைவெளி பேணல்.
- மூக்கு மற்றும் வாயை மூடும்படி முகக்கவசம் அணிதல்.
- கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளை (Covid -19 தடுப்பு) பெற்றுக்கொள்ளல்.
- தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்த்தல்.
- நீராவி பிடித்தல் போன்ற செயற்பாடுகளால் இயன்றளவு தொற்றிலிருந்து பாதுகாப்பாய் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பர்களே

| | | |
|---|---|---|
| நல்ல நாள் | – | இன்று |
| நல்ல வெகுமதி | – | மன்னிப்பு |
| அறியக்கூடாதது | – | அடுத்தவன் செயலை |
| இருக்க வேண்டியது | – | மானம் |
| இருக்க கூடாதது | – | ஆணவம் |
| தேவைக்கேற்றது | – | சாமர்த்தியம் |
| தேவையற்றது | – | விவாதம் |
| எதிலும் சுலபமானது | – | குற்றம் காணல் |
| எதிலும் கடினமானது | – | பிழையின்றி வாழ்தல் |
| மேல் தரமானது | – | நட்பு |
| கீழ் தரமானது | – | துரோகம் |
| செய்ய வேண்டியது | – | உதவி |
| செய்ய கூடாதது | – | உபத்திரம் |
| அறிய வேண்டியது | – | உலக செயலை |
| அடங்க நினைப்பது | – | தாய் தந்தைக்கு |
| அடக்க நினைப்பது | – | உனது மனதை |
| நம்பக் கூடியது | – | மனசாட்சியை |
| நம்பக் கூடாதது | – | வதந்தியை |
| பார்க்க கூடியது | – | பகுத்தறிவு |
| பார்க்கக் கூடாததது | – | உன் மரணம் |
| வாழத்தேவையானது | – | நம்பிக்கை |
| வாழத்தேவையற்றது | – | சந்தேகம் |
| கொடுக்கக்கூடியது | – | அன்பு |
| தடுக்கக் கூடியது | – | கோபம் |
| இழக்கக் கூடியது | – | பகை |
| இரக்கமான உணர்வு | – | பாசம் |
| புனிதமான உணர்வு | – | அன்பு |
| பகுத்தறிவான உணர்வு | – | இரக்கம் |
| ஆணுக்கு தேவையானது | – | உழைப்பு |
| பெண்ணுக்குத் தேவையானது | – | அடக்கம் |
| பெண்ணுக்கு தேவையற்றது | – | தனிமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தான பலன்

| | | |
|---|---|---|
| அன்ன தானம் | – | தரித்திரம் நீங்கும். |
| வஸ்திர தானம் | – | ஆயுள் விருத்தி உண்டாகும். |
| பூமி தானம் | – | பிரம்மலோகம் ஈஸ்வரதரிசனம் கிட்டும். |
| தேன் தானம் | – | புத்திரபாக்கியம் உண்டாகும். |
| கோ தானம் | – | ரிஷிக்கடன், தேவகடன், பிதிர்க்கடன், ஆகியவற்றை நீக்கும். |
| நெல்லிக்கனி தானம் | – | ஞானம் உண்டாகும். |
| தீப தானம் | – | பாவங்களைப் போக்கும். |
| நெய் தானம் | – | நோய் தீர்க்கும். |
| பால் தானம் | – | துக்கம் தீர்க்கும். |
| தயிர் தானம் | – | இந்திரிய விருத்தி உண்டாகும். |
| தேங்காய் தானம் | – | நினைத்த காரியம் முடியும். |
| பழங்கள் தானம் | – | புத்தியும், சித்தியும் கிட்டும். |
| தங்க தானம் | – | குடும்ப தோசம் நீங்கும். |

## மனித தர்மம்

| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | – | நேர்மை |
| கோபத்திலும் | – | பொறுமை |
| தோல்வியிலும் | – | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | – | பரோபகாரம் |
| துன்பத்திலும் | – | தைரியம் |
| செல்வத்திலும் | – | எளிமை |
| பதவியிலும் | – | பண்பு |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"நன்றி மறப்பது நன்று அன்று: நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று"

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு ஆண்டவன் அடி சேர்ந்து விட்ட எமது குடும்பத் தலைவர் திரு.இளையதம்பி கிருஸ்ணராஜா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு வருகை தந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும், இறுதியாத்திரை வரை வருகை தந்து ஈமச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் (Banner), மடல்கள் தந்து அஞ்சலி செலுத்தியவர்கட்கும், ஆத்ம சாந்தி கிரியைகளில் பங்குபற்றிச் சிறப்பித்த அன்புள்ளங்களுக்கும், அன்னாரின் வைத்தியத்திற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த வைத்தியர்களுக்கும், இந்நினைவு மலரினை சிறப்புற ஆக்கி அளித்த கிளிநொச்சி வேழன் பதிப்பகத்தாருக்கும், இறுதிக்கிரியைகளை சிறப்புற நிறைவேற்றிய அந்தணகுருமாருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்தே நிறைந்த மகான்

சாத்வீக குணம் நிறைந்த
சத்திய புருஷன்


சுயநலம் நிறைந்த உலகில்
பொதுநலம் ஒன்றே தன்னலம் என்று
வாழ்ந்த மகான்

எண்பதுகளில் அறம் பிழைத்திடா
அரசியல் செய்த கிளிநொச்சியின் அரசன்

தன்னை நம்பிய மக்களுக்கு
உண்மையாக இருந்த அரசியல்
அரிச்சந்திரன்

உடலில் உயிர் உள்ள வரை
ஊருக்காய் உழைத்திட்ட உத்தமன்

புவி இருக்கும் வரை தங்கள் புனித
நினைவுகள் நம்முடன் இருக்கும்.



- ப. சேரன்
திருவையாறு

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org